சிவாஜி

தூத்துக்குடியில் வ. உ. சி. வங்கம்

P4

கடல்கலக்கியாடிய பண்டைத் தமிழ் மரபு

"தூத்துக்குடியில் எங்கள் வ. உ. சியின் பெயர்கொண்ட வங்கம் ஒன்றைக் கடலில் பாய்விரித்தார் ராஜாஜி" என்ற செய்தி கேட்க அளவற்ற மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் பொங்கியெழுகிறது.

அன்னிய ஆதிக்கத்தில் அவதியுற்றுக் கடற்படை இழந்துவிட்ட நம்மவர் வாழ்வில் கடலாடும் கலையை மீண்டும் ஒளியுறச்செய்ய அந்தநாளில் தேசபக்தர் தூத்துக்குடி வ உ சிதம்பரம் பிள்ளை அரும்பாடுபட்டார். அதன் பயனாக அவர் சிறையிடப்பட்டுச் செக்கிழுத்தார்.

இழந்த சுதந்திரத்தைப் பெற்றுவிட்ட இன்று, அவர் பெயரால் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் நம்முடைய கொடி பறக்கப் புதுக்கப்பல் செல்லுவதைக்காண நாம் கொடுத்துவைத்தோம்.

கப்பலை மிதக்கவிட்ட ராஜாஜியின் அரிய சொற்பெருக்கில் உணர்ச்சியும் சரித்திரப் பெருமையும் தோய்ந்த நமது பண்டைப் புகழ் விளக்கப்பட்டிருக்கிறது. அதிகாலையில் கடலில் கதிரவன் உதிக்கும் பொன்னிளங்காலையில் நமது காளையர் கட்டுமரங்களும் தோணிகளும் ஊர்ந்து கடலாடி மீன் பிடித்து முத்தெடுத்து வரும் காட்சி இன்றும் காணப்படுவதொன்று.

பண்டைநாள் திரைகடலோடித் திரவியம் சேர்த்து, உலகெங்கும் கடற்படை செலுத்தித் திரும்பிவந்தவன் தமிழன். அவன் அன்று கட்டிய சிப்பல் தான் ஆதிக்கப்பல்—மனிதன் கண்ட முதல் கப்பல். இன்று ஆங்கிலேயர் "ஷிப்" என்ற பெயர் வைத்திருக்கும் கப்பல் பண்டைத் தமிழன் கப்பலுக்கிட்ட "சிப்பல்" என்ற பெயரிலிருந்து கடன் வாங்கப்பட்டதுதான். "கப்பித்தான்" என்ற வங்கம் செலுத்தும் தமிழ் வீரனின் பெயரை இன்று ஆங்கிலத்தில் "காப்டன்" என்று உருமாறிப்போனன். கடல் கலக்கிவந்த கப்பலை அன்று தமிழன் "நங்கூரம்" பாச்சி நிறுத்திய செயலைத்தான் இன்று ஆங்கிலேயர் "ஆங்கர்" என்று கூறுகிறார்கள்.

வலிந்து வளைத்து நம்முடையதாக இச்சொற்களைப் புனைந்து கூறுவதாகத் தோன்றலாம் ஒரு சிலருக்கு. விருப்பு வெறுப்பு விடுத்து சிந்தித்து ஆராய்வோருக்கு இதன் உண்மை புலனாகாமற்போகாது.

உலகில் ஏனைய நாட்டினர் நாகரீகம் படைத்து வங்கம் ஊர்ந்து வாணிபம் பெருக்குமுன்னரே நம்முடைய நாட்டின் ஏலேல சிங்கர்கள் அமெரிக்காவாகிய நாகலோகத்துக்கும், ரோமாபுரிக்கும் சென்று வாணிபம் புரிந்த வண்ணத்தை நம்முடைய இலக்கியங்களிலும் சிற்பச் சிறப்பிலும் அழியாத சரித்திரமாகக் காணமுடியும்.

நாடு அடிமைப்பட்ட காலத்தில் கடல் ஆட்சியை நாம் மீட்டுப் பெறுதல் விடுதலைக்கு வித்து என்ற உண்மையை உணர்ந்தே தேசபக்தர் சிதம்பரனார் அன்று சுதேசிக் கப்பல் கம்பெனி ஆரம்பித்தார்.

நம்முடைய பண்டைய நாகரீகங்களில் நெசவுத் தொழிலை அழிக்க நம்மவரின் கட்டைவிரலைக் "காணிக்கை" ஏற்ற அன்னிய அரசினர், கப்பல் ஓட்டிய வீரரை செக்கடியில் நுகத்தடியில் பூட்டி ஓட்டினார்கள். இந்த நிலைக்குக் கொதித்துப் பாரதி பாடிய பாடல் உணர்ச்சிக் கனல் சிந்துவது

"ஓட்டம் நாங்கள்
எடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய் பொருள்
ஈட்டினாய்"

என்று வெள்ளையன் வீரர் சிதம்பரனாரைப்பார்த்து உறுமுவதான வரிகள் இன்றும் நம் இடைக்காலத்து இழிநிலையை இன்னதென்று எடுத்துக்காட்டும்.

"கிடக்கும் பெரிய கடல் கண்டாய் இதன் கிழக்கிலும் மேற்கிலும்" என்று பூகோள எல்லையைப்பாரதி பாப்பாவுக்குக்கூறும் பெருமிதம் இந்தப் பரந்த கடல் நம் பண்டைச் சிறப்புக்கும் அதன் ஆட்சி நம்முடையதென்ற உண்மைக்கும் பொருளாக விளங்கவில்லையா?

இன்று தூத்துக்குடியில் புறப்படும் கப்பல் நம்முடைய சுதந்திரத்தின் சின்னம். நமது பண்டைப் பெருமையின் மணிவிளக்கம். நம்முடைய புது வாழ்வின் கலங்கரை விளக்கம்.

சிதம்பரனார் 40 ஆண்டுகளுக்கு முன் கண்ட அந்தக்கனவு இன்று நனவாகியிருக்கிறது. வாழ்க்கையின் எத்துறையிலும் புதிய ஒளி கண்டால் நமது சிறப்பு குன்று மணி விளக்காய் உலகெங்கும் சுடர் ஏறத் திகழும்.

கப்பலோட்டிய தமிழர்
வ. உ. சிதம்பரம் பிள்ளை

அன்னிய ஆதிக்கத்தில் அவதியுற்றுக் கடற்படை இழந்துவிட்ட நம்மவர் வாழ்வில் கடலாடும் கலையை மீண்டும் ஒளியுறச்செய்ய அந்தநாளில் தேசபக்தர் தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை அரும்பாடு பட்டு சுதேசிக்கப்பல் கம்பெனியை ஆரம்பித்து அதன் பயனாகப்படாத கஷ்டமெல்லாம் பட்டு சிறையில் செக்கிழுத்தார அந்தத் தியாக புருஷரின் ஆத்மா இன்று ராஜாஜி அவர்கள் மிதக்கவிட்ட 'சிதம்பரம்' என்ற சுதந்திரக் கப்பலைக் கண்டு சாந்தி அடைந்திருக்கும்.

சரித்திரத் தொடர் “ராணா”

பதினோராம் அத்தியாயம்

தார்ணாக் கோட்டை

சிவாஜி இப்போது வயதிலும், அறிவிலும் வளர்ந்து வீரம் ததும்பும் ராணுவ தந்திரியாக உருவாகி விட்டான். அன்னையின் போதனையும், தாதாஜியின் கல்வியும் தவிர சுயமாகவே நாட்டு நிலையைத் தெளிவாக உணர்ந்து தனது வருங்காலத்தைப்பற்றிய தெளிவான முடிவுகள் காணுதற்குரிய தன்மை அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

சிவாஜிக்குப் பத்தொன்பது வயதாகும்போது அவனது வலிமையும், அழகும், தேகக்கட்டும் அபூர்வமாக இருந்தன. அன்னையின் அன்பு அங்கரூப சௌந்தரியத்தைக் கண்டு வியந்தது. குருவின் அரவணைப்பு அதற்கு ஆசி கூறியது.

சிவாஜியின் அடுத்த வாழ்க்கைச் செயல்பற்றி ஜீஜா தெளிவான கருத்து ஏதும் கொள்ளவில்லையானாலும் தாதாஜியின் ஆசை ஒரு குறித்த இலக்கில் பாய்ந்திருந்தது பீஜபுரி ராணுவத்தில் ஒரு நல்ல பதவி பெற்று ஷாஹஜியைப் போலவே சிவாஜியும் செல்வச் செருக்கு மிகுந்த வாழ்க்கை வாழத் தகுதி படைத்து விட்டான் என்று தான் அவர் நினைத்தார்.

தாதாஜிக்கு தேசீயப் புனர் ஜீவனத்தில் யாதொரு கருத்தும் செல்லவில்லையென்றால். அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. நாட்டில் அக்காலத்து நிலவிய சூழ் நிலையில் எவ்வித புரட்சிகரமான செயலும் ஆற்றமுடியாது என்பதே அவர் கருததாக இருந்தது. மேலும் ஹிந்துக்களிடையே இத்தகைய எண்ணம் சிறிதும் உதயமாகவே இல்லை. ஏதோ ஒரு நிலையான அரசியலமைப்பின் கீழ் திருப்தியடைந்து சோம்பி வாழ்ந்து வந்த ஹிந்து சமுதாயத்துக்கு சிவாஜியின் அந்தராத்மாவில் கனன்று வந்த சிந்தனைகள் பற்றி ஏதும் தெரியாது.

இந்நிலையில் தளவாடங்களோ, ஆயுதங்களோ இல்லாத சிறு மலைக்கூட்டத்தினரை வைத்துக் கொண்டு வாலிபன் சிவாஜி ஏது! சாதிக்க முடியும் என்ற எண்ணமே தாதாஜிக்கு எழாமலிருந்தது அவரது குற்றமல்ல.

சிவாஜி தன் பலத்தின் எல்லைகளை உணராமலில்லை. வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அவன் எச்செயலும் புரிந்துவிடவில்லை. ஐரோப்பா முழுவதையுமே தன வசமாக்கி உலகத்தையே வியக்க வைத்த நெப்போலியன் சக்ரவர்த்தியின் இளமைக் காலத்து ராஜதந்திர வழியையே சிவாஜியும் கடைப்பிடிக்க ஆரம்பித்தான்.

சிவாஜி தனது திட்டங்களைப் பற்றி யாரிடமும் எதுவும் கூறவில்லை; எவருடைய ஆலோசனையையும் கேட்கவில்லை. தனக்குள்ளேயே அவற்றை மூடிவைத்திருந்தான். அவனுக்கு உற்ற குருவும், அன்னையும்கூட அவன் செயல் புரிந்தபின்னரே அதைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியிருந்தது.

அந்தக் காலத்தில் நிலவிய அரசியல் நிலை இதுதான். சிவாஜியின் பிராந்தியத்துக்குவடக்கே அதையொட்டினாற்போல ராணுவபலம் மிகுந்த மகத்தான மொகலாய சாம்ராஜ்யம் வியாபித்திருந்தது. தெற்கே, தன் பிராந்தியம் உட்பட, பீஜபுரி சுல்தானின் கீழ் இருந்தது பெயர் சொல்லக்கூடிய சிறு ஹிந்துராஜ்யங்களோ, சிறுசமஸ்தானங்களோகூட நாட்டில் எங்கும் இருக்கவில்லை எங்கோ, தெற்கே, வெகு தூரத்துக்கப்பால் சிறு ஹிந்து அதிகாரங்கள் இருந்தன. ஹிந்து சமுதாயத்திடையே எவ்வித ஊக்கமும் இல்லை மங்கலான சந்தியா காலத்து ஒளியில் அது ஒடுங்கி அயர்ந்திருந்தது.

அந்தக்காலத்து ராணுவ நிலையைக் கவனித்தபோதுதான் சிவாஜிக்கு ஊக்கம் பலமடைந்தது

சிவாஜியின் பிராந்தியத்தைச் சூழ்ந்து ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பல கோட்டைகள் சங்கிலி வளையம்போல் இணைந்து நின்றன. இந்தக் கோட்டைகள் பீஜபுரி சுல்தானின் கீழ், அவரால் நியமிக்கப்பட்ட ராணுவகவர்னர்களது கைவசத்தில் ஒப்படைக்கப் பட்டிருந்தன. இவற்றில் முக்கியமாக பூனாவுக்கு மேற்கே சஹ்யாத்ரி மலைத்தொடரில் சிகரம் போல் நின்ற சில கோட்டைகள் அதிக ராணுவப்பிராதான்யம் வாய்ந்திருந்தன.

மொகலாய ராஜ்யத்துக்கும், பீஜபுரி ராஜ்யத்துக்கும் எல்லையில் நின்ற இக்கோட்டைகள் சிக்கலான, ஆனால் வெற்றிகரமான அரசியல்-ராணுவ தந்திரம் படைத்த ஒரு வீரனுக்கு வெற்றியளிக்கும் வாய்ப்பு படைத்திருந்ததை சிவாஜி உணர்ந்தான்.

பீஜபுரி அரசனுக்கும், டில்லி பாதுஷாக்களுக்கும் இடையே நிலவி வந்த சந்தேகாஸ்பதமான உறவுகளைத் தனக்கு சாதகமாக சமயோசிதம்போல் உபயோகித்துக்கொண்டு தனது மகத்தான லட்சியத்துக்கான செயலைக் கொண்டுசெலுத்த முடிவு செய்தான் சிவாஜி.

இரு சாராரையும் மிரட்டுவதற்குரிய பலம் தனக்குச்சேருவதற்கு இந்தக் கோட்டைகள் தன் வசம் இருக்க வேண்டியது முதல் அவசியம் எனபதைக் கண்டுகொண்டான்.

பூனா நகருக்குத்தென்மேற்கே தார்ணா என்றொரு கோட்டை இருந்தது. இந்தக்கோட்டை ஒரு முக்கியமான மலைக்கணவாயைக் கீழ்நோக்கி நின்றது. இது பீஜபுரி சுல்தானால் நியமிக்கப் பட்ட ராணுவத் தலைவன் வசம் தான் இருந்தது.

இந்த எல்லைப்புறக் கோட்டைகளுக்கும் பீஜபுரிக்கும் இருந்த தொடர்பு கேலிக்குரியதாக இருந்தது. பீஜபுரி சுல்தான் இவற்றில் எந்த அக்கறையும் செலுத்தியதாகத் தெரியவில்லை.

செயலற்றுச் சோம்பிஇருக்க வேண்டிய நிர்பந்தத்தில் ஆழ்ந்திருந்த ராணுவத்தினருக்கு மனக்கசப்பே மிகுந்திருந்தது.

குறிப்பாக தார்ணாக் கோட்டையில் காவல் வகித்த ராணுவத்துக்கு சில கொடுமைகள் தாங்க முடியாதனவாக இருந்தன. வெய்யிற்காலத்தில் இக்கோட்டையில் வாசம் செய்வது சுகமாயிருந்த போதிலும்மழைக்காலத்தில் சகிக்க முடியாத தொந்தரவு கொடுத்தது. மழையடித்துஒழுக்கலெடுத்துப்போன கோட்டையில் குளிருக்கும் சாரலுக்கும் ஆளாகிக் கொடுமைப்படவேண்டியிருந்தது.

மேலும் மழைக்காலத்தில், அடிவாரத்து கிராமங்களிலிருந்து வழக்கமாக வரும் உணவுப் பொருள்களும் காய்கறிகளும் வருவதில்லை. கோட்டையைச்சேரும் ஒற்றையடிப் பாதைகளெல்லாம் மழையில் காணமற்போய்விடும்! இந்நிலையில் பல ஆண்டுகளாக அவதியுற்றுவரும்ராணுவத்துக்கு மனோநிலை எவ்வாறிருக்கும் என்று ஊகிப்பது சிரமமான காரியமல்ல.

இந்த நிலையை உன்னிப்பாகக் கவனித்து வந்த சிவாஜியும் அவனது சிறுபடையினரும் ஆவலாக சமயம் பார்த்துக் காத்திருந்தனர்.

தார்ணாக் கோட்டை ராணுவத்தலைவன் அந்த ஆண்டு(1646) மழைக்காலம் ஆரம்பிக்கையில் தனது பழைய அனுபவங்களால் உந்தப்பட்டவனாக அந்தக்கோட்டையை விடுத்து ராணுவத்துடன் அடிவாரத்துக்கு இறங்கி விட்டான். மழைக்காலம் முடிந்ததும் திரும்பி வந்துவிடலாமென்பது அவன் யோசனை. தனது செயலைப்பற்றி பீஜபுரித் தலைமைக் காரியாலயத்துக்கு அவன் தெரிவிக்கவேயில்லை. ராணுவத்தினர் செய்யக்கூடாத அவமானகரமான, ஆபத்தான செயலைச் செய்யும் ஒருவன் எப்படித் தெரிவிப்பான்!

கண்குத்திப் பாம்பாகக் காத்திருந்த சிவாஜி உடனே தார்ணாவுக்குள் தன் சிறு படையுடன் புகுந்து அதை ஆக்கிரமித்துக் கொண்டான். கோட்டையிலிருந்த தளவாடங்களும், பொக்கிஷமும் அவனுக்கு அப்படியே கைவசமாயின. தனது படையினரை விரைவில் அதிக ஆயுதங்களால் வலுப்படுத்தியதுடன் அவர்களுக்குப் பரிசும் அளித்து இன்பமூட்டினான்

தார்ணா கோட்டையைச் சிவாஜி கைப்பற்றிவிட்ட சேதி அடிவாரத்துக்குக் குளிர் காயச் சென்ற ராணுவத் தலைவனுக்கு எட்டியபோது அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவசர அவசரமாக பீஜபுரிக்குச் சேதியனுப்பி சிவாஜியின் அதிக்ரமத்தை அறிவித்தான்.

குருதேவர் தாதாஜி இந்த எதிர்பாராத சேதிகேட்டுக் கலங்கிப்போனார் உடனே பீஜபுரிக்குத்தூதனையனுப்பி ஷாஹஜிக்கு சேதி அறிவித்தார். ஏனெனில் சிவாஜியின் செயலைக் கண்டித்து அவனுக்கு அனுப்பிய கடிதத்துக்கு யாதொரு பதிலும் வரவேயில்லை.

ஷாஹஜி தன் தனயன் விஷயத்தில் ஒருவாறாகக் கையலம்பி விட்டுத் தம் காரியங்களில் மூழ்கியிருந்ததால் தாதாஜியின் எச்சரிக்கையை அவர் கவனிக்கவேயில்லை. ‘தவறு செய்த பிள்ளை படவேண்டியதைப் பட்டும், எக்கேடு கெட்டுப் போகட்டும்’ என்ற முறையில் அவர் சும்மா இருந்துவிட்டார்.

சிவாஜி தன் செயலுக்கு பீஜபுரியில் என்ன எதிரொலி ஏற்படும் என்பதை உணராமலில்லை. அதற்குத் தக்க ஏற்பாடு உடனடியாகச்செய்தான்.

பீஜபுரிக்குத் தன் தூதன் ஒருவனை நிறையப் பணத்துடன் அனுப்பினான். தான் சுல்தானுக்கு என்றும்போல் நன்றியுள்ள பிரஜையாகத்தான் இருந்ததாகவும், திறமையற்ற சோம்பேறியான ராணுவத்தலைவனது இழி செயலைப் பகிரங்கமாகக் கண்டித்துக் காட்டவே தான் தார்ணாக் கோட்டையைக் கைப்பற்றியதாகவும் பலமாக சாதித்தான். இத்தகைய மோசமான ஒருவனிடம் இவ்வளவு பெரிய கோட்டைக் காவல் பொறுப்பை ஒப்படைப்பது தவறு என்று எடுத்துக் காட்டினான்.

பீஜபுரி ராணுவத்தலைமைக் காரியாலயத்துக்கு அந்தச் சோம்பேறி ஊழியனிடம் கோபம திரும்பியது. சிவாஜியின் தூதன் அழகான வேறு கதைகள் ஜோடித்து, மேலும் மேலும் புதியகுற்றங்கள் சாட்டி இந்தக் கோபத்தை வளர்த்து விட்டான்.

இது விஷயமான விசாரணை விரைவில் ஆரம்பிக்கப்பட்டது. தர்பார் குமாஸ்தாக்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஏராளமான லஞ்சம் கொடுத்துவிசாரணையை வளர்த்தான் தூதன். கண்டனங்களும், எதிர்க்கண்டனங்களுமாகக் காலம் ஓடிக்கொண்டிருந்தது.

இந்த இடைக்காலத்தில்மழை ஓய்வதற்குள் தார்ணாவுக்கு சுமார் ஐந்துமைல் தூரத்தில், தெற்கே, பீஜபுரியிலிருந்துவரும் மார்க்கத்தில் இருந்த ராஜ்கட் கோட்டையை சிவாஜி பலப்படுத்தித் தற்காப்புக்குத் தயார் செய்துகொண்டான்.

(தொடரும்)

கலாச்சார நியதிகள்

இன்று உலகை அலைக்கழிக்கும் பிரச்னைகளை நாம் தீர்க்க வேண்டுமானால் கலாச்சார ஒழுக்க நியதிகளை கவனத்தில் கொள்ளவேண்டும். அன்றாட வாழ்விலிருந்து கலாச்சார, ஒழுக்க நியதிகள் பிரிக்கப்படுவதை இந்தியா உள்பட உலகம் முழுவதிலும் காண்கிறோம்.

— ஜவஹர்.

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை 14	திருச்சி, 13—2—49 சர்வதாரி-ஞு மாசி-மீ, 2-உ	முற்றுகை 11

மதம் என்ற வார்த்தையைப் பலர் பல விதங்களில் அர்த்தப்படுத்திக் கொள்கின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் காணப்படும் மதத்தில் உமிதான் இருக்கிறதே ஒழிய அரிசி இல்லை. இவ்விதம் சாரமில்லாத சக்கையான மதம் இப்போது அனுஷ்டிக்கப்படுவதால் அதில் எனக்கு அவ்வளவு கவர்ச்சியில்லை. ஆயினும் மதத்தின் விரிவான ஆழ்ந்த உண்மைகள் மூலம் வாழ்க்கைக்கு மிகுந்த பயன ஏற்படும் என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த உண்மைகளை இக் காலத்தில் பெரும்பாலோர் உணர்வதில்லை. —ஜவஹர்.

ஹிந்து மத தர்மஸ்தாபன மசோதா

பொது மக்களுக்குப் புதிர்

பொருளாதார அரசியல் சீர் திருத்தங்கள் ஆயிரம் காத்திருக்க இப்படி ஒரு மசோதாவுக்கு என்ன அவசரம் வந்திருக்கிறது என்று ஒரு கட்சி.

ஒவ்வொன்றுகச் செய்து முடித்துக்கொண்டு அடுத்ததைக் கவனிப்பதென்றால் அதற்குள் உலக இறுதியே வந்துவிடக் கூடுமே. எல்லாவற்றையும் முடிந்தவரையில் சீர்திருத்திப் பார்த்துவிட வேண்டியதுதான் என்பது அதற்கு எதிர்க் கட்சி.

மடங்கள், குறிப்பிட்ட கொள்கைகளில் நம்பிக்கையுடைய சீடர்களால் அந்தக் கொள்கையின் ஆசார்ய புருஷனுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட ஆஸ்திகளை வைத்து நடைபெறுவனவேயன்றி, குறிப்பிட்ட பொதுஜன உதவிக்கோ தர்மத்துக்கோ வென்று விடப்பட்ட நன்கொடைகளல்ல. எனவே மடாலயங்களைக் கட்டுப்படுத்தி, கோயில்களைப்போல் ஆக்கிவிடக் கூடாது என்பது ஒரு கட்சி.

வாதப்படி சரிதான். ஆனாலும் பொதுமக்கள் பலரால் நல்ல எண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் வழங்கப்பட்ட ஆஸ்திகளை — அவர்கள் வைத்த நம்பிக்கைகளுக்குப் புறம்பான முறையில் மடாதிபதிகள் ஆடம்பரமாக வீணடிப்பதை பொறுப்புள்ள அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவற்றை குறிப்பிட்ட நம்பிக்கைகளின் கீழ் நிர்வகிக்கப்படுவதைக் கவனித்துக் கொள்ள வேண்டிய உரிமை அரசாங்கத்துக்கு இல்லாமல் போய்விடவில்லை என்பது அதற்கு விடை கூறும் விதம்.

மதச் சார்பற்ற சர்க்கார் மத விஷயங்களில் தலையிடலாமா என்பது கேள்வி.

மதச் சார்பற்ற சர்க்கார்—மதத்தின் பேரால் தேசத்தின் செல்வமும் வளமும் விரயமாவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட முடியுமா என்பது இதற்குக் கூறப்படும் பதில்.

ஜீவாதார உரிமைகள் பற்றிய அரசியல் நிர்ணய திட்டம் வரப் போகிறது. அதற்குள் அவசரப்பட்டு அதற்கு விரோதமான சட்டம் செய்வது அநீதம் என்பது ஒரு குற்றச்சாட்டு.

"அந்த சட்டம் வரும் வரையில் ஒரு காரியமும் செய்யாமலிருக்க வேண்டுமா? அப்படியும் இந்த சட்டப்படி ஜீவாதார உரிமைகள் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை அப்படி அவை முழுகிப் போவதாயிருந்தால் நீதிஸ்தலங்களில பரிகாரம் பெறலாமே என்பது விடை.

ஃ ஃ ஃ

இப்படி இவ்வளவு சிக்கல்களுக்குக் காரணமாக விளங்குவது ஹிந்து தர்மஸ்தாபன மசோதாவில் மடாலயங்களையும் சேர்த்திருப்பதுதான்.

கோயில்களில் அர்ச்சா ரூபமாக எழுந்தருளிவிட்ட கடவுளின் பெயரால் மனிதன் எந்த சீர் திருத்தத்தையும் செய்துவிட்டால அதைப்பற்றி அவ்வளவு கவலையில்லை. இப்பொழுது வந்திருக்கும் விவகாரமெல்லாம் மடாலயங்களில் வீற்றிருப்போர் — மடாதிபதிகள்— விருப்பு வெறுப்புகளுக்குப் புறம்பாகாத — மனிதர்களாக இருப்பதுதான்.

முன்பொரு சமயம் அரவிந்தாசிரமத்தைப்பற்றிப் புதுச்சேரியில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டதுண்டு. அரவிந்தருக்கு சிஷ்யர் அளித்த காணிக்கைகள் அனைத்தும் தர்ம சொத்து என்ற கொள்கையில் சிலர் அவற்றின் நிர்வாகததைப் பற்றியும் வரவு செலவுபற்றியும் அறிந்து கொள்ள முயன்றபோது அரவிந்தர் ஒரு அறிக்கை விடுத்திருந்தார். அதாவது குறிப்பிட்ட ஒரு கொள்கையில் நம்பிக்கை உடைய சீடர்கள் அந்தக் கொள்கையின் ஆசார்யனுக்கு தாங்கள் விரும்பிக் கொடுக்கும் காணிக்கை அந்த ஆசார்யனுடைய யுக்தானுகார விநியோகத்துக்கு உட்பட்டதேயன்றி அதைக் கொடுத்தவர்கூட அதைப்பற்றி விசாரிக்க உரிமையில்லையென்று.

மடங்களின் விஷயத்திலும்கூட இந்த வாதம் இன்று எழுந்திருக்கிறது. கோயில்களில் குறிப்பிட்ட உத்சவங்களுக்கோ, கட்டளைக்கோ, பலர் விட்ட மான்யங்களும், காணிக்கைகளும்போலத்தான் மடாதிபதிகளுக்குச் சீடர்கள் தரும் காணிக்கை தகுமா என்பது ஒரு பிரச்னை

இது சம்பந்தமாக வாதப்பிரதிவாதங்கள் சிக்கலான சூழ்நிலையையே உருவாக்கி வருகின்றன. ஒருவர் இது சம்பந்தமாக உண்ணுவிரதம் அனுஷ்டித்து வருகிருர். இதற்கு இணங்கினால் அதை எதிர்த்து மற்றும்பலர் உண்ணுவிரதம் இருக்கப்போவதாக ஒரு சட்டசபை மெம்பர் கூறுகிருர். இந்த மசோதாவைவிட உண்ணுவிரத விஷயம் மிகவும் பரிதபிக்கக் கூடியதாயிருக்கிறது.

ஒரு உண்மையை இங்கு நாம் தெரிந்து கொள்ளவேண்டும். கடவுளின் பெயரால் நடைபெறும் உற்சவங்கள், ஆர்ப்பாட்டங்கள் சட்டசம்மதமானவையென்று ஒப்புக்கொண்டால், கடவுளுக்கு அணுக்கத் தொண்டர்களாக—கடவுளின் நிலையில் வைத்துப் போற்றப்படும்—மடாதிபதிகளின் விழாக்களில் மட்டும ஆடம்பரம்—வீண் விரயம் ஏற்பட்டுவிடுவதாகக் கருதுவதில் பொருளில்லை. மதத்தை முற்றிலும் நிர்மூலமாக்கிவிடத் தனக்கு அதிகாரமில்லையே என்று ஒரு சட்டசபை மெம்பர் வருந்துகிருர். அந்த அதிகாரத்தை மேற்கொள்ளுவதானல் இந்த மசோதா புரட்சிகரமானதல்ல.

மதப்பற்றற்ற அரசாங்கம் எந்த மதஸ்தாபன சொத்துக்களையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டியதில்லை. தேசத்தின் செல்வத்தில் தர்மஸ்தாபன சொத்துக்களும் சேர்ந்தவையே என்ற அடிப்படையில் அவற்றின்மீது கண்காணிப்புச் செய்வதே போதுமானது. சர்க்காரின் சிப்பந்திகள் சர்க்கார் செலவில் வருணஜபம் செய்யக்கூடிய அளவு புரட்சிகரமான கொள்கை உருவாகிவரும் அரசாங்கம்; மடாலயங்களின் நிர்வாகத்தை எடுத்துக்கொண்டு விடுவது புனிதமான சீர் திருத்த நோக்கத்துடன்தான் என்று நாம் ஒப்புக்கொள்ள இயலாது. வருணஜபம் நியாயமான செலவினம்தான் என்று சர்க்கார் கருதுவதானல் அந்தச் செலவையோ அதுபோன்ற செலவுகளையோ மடாதிபதிகள் செய்வது வீண் ஆடம்பரம் என்று குற்றம் சாட்ட என்ன உரிமை இருக்கிறது?

பொதுமக்களின் ஆலோசனைக்கு இதை விட்டுவைத்துக் காத்திருந்து முடிவு செய்வதுதான் உசிதமாகும்.

மத நம்பிக்கையற்றவர்கள்—நாஸ்திகர்கள் இவர்கள் ஹிந்து மத பரிபாலன இலாகாவில் உத்யோகங்களுக்கு வராமல்—மத நூல்களில் படித்துத் தேர்ச்சி பெற்று, மத சின்னங்கள்—உருத்திராட்சம் — துளபமாலையணிந்த பக்தசிகாமணிகளை நியமிக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாவென்று தெரியவில்லை. வாயில் சிகரெட் புகையுடன், காலில் பூட்சுடன் மடாதிபதிகளின் பல்லக்குக்கு முன் பெரிய யானைமீது அம்பாரி வைத்து அதில் எழுந்தருளும் கண்காணிப்பாளர்களையோ புல்சூட் மடாதிபதிகளைப் புதிதாக நியமிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருந்தால் தாராளமாகச் செய்யலாம். மிதக் குடிப்பிரசாரம் போல இருக்கிறது சர்க்காரின் இந்த ஹிந்துமத தர்ம பரிபாலனப் பரிவு மசோதா.



அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

சமூக அமைப்பில் அரசாங்கப் பொறுப்பு

சமூகம் என்பது பல மனிதர் ஒன்றுசேர்ந்து வாழும் ஏற்பாடு. தனி மனிதர் ஒவ்வொருவரும் தனிப்பட்ட திறமையும் அறிவும் படைத்திருப்பார். சமூக வாழ்வில் இப்படித்தனி மனிதர்கள் தங்கள் உழைப்பையும் பயனையும் பரஸ்பரம் பண்டமாற்றிக்கொண்டு அனைவரும் இன்பமடைவதுதான் நோக்கம். சமூகக் கட்டுக்கோப்பில் ஒவ்வொருவரும் தன்னைப் பிறர்நன்மைக்குப் பிறருடைய உழைப்பில் தனக்குத் தேவையான பயனையும் பெறுவதே அடிப்படை ஏற்பாடு. இந்த ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெறவேண்டுமானால் பரஸ்பர நம்பிக்கையும் நல்ல எண்ணமும் செயல் முறையும் சகிப்புத்தன்மையும் தேவையாக இருக்கிறது இவற்றை வகைப்படுத்தி அனைவரும் இனிமையாக இயங்கவும் உயிர்வாழவும் செயல் புரியவும் சிந்திக்கவும் அறிவில் ஓங்கவும் மனிதன் கண்டுபிடித்த இயக்கம்தான் அரசாங்கம். தனி மனித உழைப்பையும் பயனையும் சமூகம் முழுவதுக்கும் விநியோகிக்கும் அரசு குடிவகுப்பு எந்தநாட்டில் வெற்றிகரமாக வளர்ச்சியடைகிறதோ அந்த நாட்டை நாகரீகம் மிகுந்ததென்று கூறுகிறோம், இந்த நாகரீக வளர்ச்சியைக் காலத்தாலும் தூரத்தாலும் அளவிட்டுக் காட்டும் கணக்கைத்தான் சரித்திரம் என்று கூறுகிறோம்

தமிழ் நாட்டின் சரித்திரம் மிகப்புராதனமானது. அதாவது சமூக ஏற்பாட்டில் தமிழ்மகன் மற்றவர்களைவிட நாகரீகச் சிறப்புடன் வாழ ஆரம்பித்த அந்த முதல்நாள் மிகப்புராதனமானது. ஆனால் இன்று நம்முடைய சமூக வாழ்வில் நாகரீகம் தேய்ந்து மங்கிக்கிடக்கிறது. பரஸ்பர நம்பிக்கையும் சகிப்புத்தன்மையும் தியாக சீலமும் அருகிப்போய் விட்டிருக்கிறது காரணம் அரசாங்கமுறை இடைக்காலத்தில் மற்ற நாட்டினரின் நன்மை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டிருந்ததுதான் காரணம் என்றால் விடுதலையடைந்திருக்கும். இந்த நிலையில் இனியாவது நம்முடைய சமூக வாழ்வில் நாகரீகம் புத்துயிர் பெறவேண்டாமா?

இடைக்காலத்தில் அன்னியர் ஆட்சியில் சமூகவாழ்வு பொய்யும் சுயநலமும் நிறைந்ததாக ஆகிவிட்டிருந்தது. அதன் வாசனை நம்மைவிட்டுத்தொலைய இன்னும் எத்தனைகாலம் ஆகுமென்று தெரியவில்லை.

நாயுடு அவர்கள் இங்கிலாந்து தேசத்தின் சமூக வாழ்வில் மக்கள் எவ்வளவு நாகரீகம் அடைந்து வாழ்கிறார்கள் என்பதைப்பலப்பல உதாரணங்களால் அனுபவ வாயிலாக விவரிப்பதைக் கண்டால் அத்தகைய நிலை நம் சமூகத்தில் வளரவேண்டும் என்ற துடிப்பும், இன்னும் சீர்திருந்தாத சமூக ஊழலைக் கண்டு வருத்தமும் மேலிடவே செய்கிறது.

"மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி" என்பது படிக்கு. அரசாங்க அதிகாரிகளும், சட்டம் ஒழுங்கு இவற்றிற்கு பாதுகாவலாக இருக்கும் போலீஸ்காரர்களும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காவிட்டால், கடைத்தெருவில் கள்ள மார்க்கெட்டும், கோர்ட்டுகளில் பொய் வழக்கும், கோயில்களில் மதச் சண்டைகளும் ஒருக்காலும் தொலையப்போவதில்லை.

ஆஸ்பத்திரிகளில் ஏழைகளுக்கு தக்க உதவி இங்கு கிடையாது. கோர்ட்டுகளில் ஏழை நீதி பெற ஏராளச்செலவு செய்ய வேண்டும். தொழிற்சாலைகளில் உழைப்பாளிக்குப்போதிய ஊதியம் கொடுக்காமல் முதலாளிகள் சுரண்டிக் கொள்கிறார்கள். வாழ்வே வரண்டு கிடக்கிறது.

இங்கிலாந்து ஆஸ்பத்திரி ஒன்றைப்பற்றி நாயுடு அவர்களின் அனுபவத்தைக் கேளுங்கள். இந்த நாட்டில் அம்மாதிரி ஒழுங்கைக்கண்டிருந்தால் கூறுங்கள்.

"தீப்பிடித்த கப்பலிலிருந்து தப்பிப்பிழைத்த கதையைச் சொன்னேன் அல்லவா? லண்டனுக்கு வரும்போது ஆறாத காயங்களுடனே வந்தேன். அங்கு யூனிவர்சிடி ஆஸ்பத்திரியில் சிகித்ஸைக்காகப் போய்ச் சேர்ந்தேன். என்னை அனுமதிக்கு முன்பு என்னுடைய மாதாந்திர வருமானம்பற்றி விசாரித்தார்கள். நான் ஏதோ ஒரு தொகையைக் குறிப்பிட்டேன், அந்த அடிப்படையில் ஏதோ கட்டணம் விதித்தார்கள். அங்கு என் சம்பந்தமாக ஆகும் செலவுகளுக்கு ஈடாக. அதை எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்ற திட்டம் எனக்குப்புரியவில்லை. சிகித்ஸைபெற்றுத்திரும்பினேன்.

சிலகாலம் கழித்து மறுமுறையும் நான் அங்கே செல்ல நேர்ந்தது. ஆனால் இந்தத்தடவை எனக்கு வருமானமே கிடையாது என்று தெரிவித்தேன். எனவே கட்டணம் எதுவும் அவர்கள் விதிக்காமல் இலவசமாக வைத்தியம் செய்தார்கள்.

பணம் கொடுப்பவருக்கும் இலவச உதவி பெறுவோருக்கும் மருத்துவ முறைகளில் ஏற்றத் தாழ்வோ கவனக்குறைவோ அதிகமோ இருக்கக் கூடுமோ என்று நான் ஐயுற்றேன். அப்படியொன்றுமில்லை. அனைவருக்கும் ஒரேவிதமான பரிவும் மரியாதையும் உதவியும் தருவதைக் கண்டு நான் அதிசயித்தேன் இந்தத்தடவை நான் ஒன்றும் பணம்கொடுக்காமலே வெளியேறி விட்டேன். எனினும் வருமானம் ஒன்றுமில்லையென்று சோதனைக்காகக் கூறினாலும் அவர்களை ஏமாற்றி விட்ட என் மனச்சாட்சியைத் திருப்தி செய்துகொள்ள வேண்டி மற்றொருமுறை சென்று ஒன்றுக்குப்பத்தாகப் பணத்தைச் செலுத்திவிட்டேன்.

"நியூ பிரைட்டன் என்ற இடத்தில் மற்றொரு நிகழ்ச்சி இதே போன்று எனக்கு ஏற்பட்டது. ஒரு சனிக்கிழமை பிற்பகலில் அங்கு ஒரு ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அன்று விடுமுறை நாளாகையால் வழக்கமாக வேலை செய்பவர்கள் பெரும்பாலோர் இல்லை. ஒருசில ஊழியர்களே இருந்தார்கள். என்னுடைய உடல்நிலைபற்றி முழு விபரமும் அவர்கள் கேட்டார்கள். பதில் கூற அறியாதவன்போல நான் நடித்தேன். உடனே ஒரு டாக்டருக்கு அவர்கள் டெலிபோன் செய்தனர். டாக்டர் வந்து என்னை உடனே சோதித்தார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட ஒரு ஐயத்தின் விளைவாக மற்றொரு டாக்டரைத்தருவிக்க வேண்டியிருந்தது எனவே வேறொரு டாக்டரும் உடனே வரவழைக்கப்பட்டார். இருவருமாகக் கலந்தாலோசித்து தக்க மருந்து ஒன்றைப்பிரயோகம் செய்தார்கள். அந்த விடுமுறை நேரத்தில் கூட தேவையான உதவிபுரிய ஊழியர்களும் டாக்டர்களும் பறந்தோடி வந்ததைக்கண்டு வியக்காமல் இருக்கமுடியவில்லை நான் விடைபெற்றுத் திரும்பும் போது வாசலில் ஒரு கூடத்தில் நின்றுகொண்டு என்னைக்கடந்து செல்லும் டாக்டர்களிடமும் தாதிகளிடமும் 5 பவுன் நோட்டு ஒன்றை ஒவ்வொருவரிடமும் நீட்டினேன். சொல்லிவைத்தாற்போல ஒவ்வொருவரும் அதை மறுத்ததுடன் அருகில் இருக்கும் உண்டிப்பெட்டியில் அதைப் போடும்படி எனக்குச் சுட்டிக் காட்டிவிட்டுத்தங்கள் வேலைமீது நாட்டமாக நடந்துவிட்டனர். இங்கிலாந்தில் இந்த அனுபவத்தைப்பெற்ற பிறகு நம்முடைய நாட்டிலுள்ள ஆஸ்பத்திரிகளில் காசை வாரியிறைப்பவர்களுக்கு ஒருவிதமும் ஏழைகளுக்கு ஒருவிதமும் அளிக்கப்படும் மருததுவ உதவியை நினைத்தால் வெட்கமாக இருக்கிறதல்லவா?

"போலீஸ், பஸ் சர்விஸ், ஹோட்டல், ஆஸ்பத்திரி இவைகளைப்பற்றிய உதாரணங்கள் கூறினேன். இதைப்போலவே இங்கிலாந்தில் பல்வேறு துறைகளிலும் அதிசயிக்கத்தக்க சமூக உணர்ச்சியை நேருக்குநேர் கண்டு மகிழும் சந்தர்ப்பங்கள் பல எனக்கு ஏற்பட்டதுண்டு. புகைபடங்களும், சலனபடங்களும் ஆங்காங்கு நான் எடுத்திருக்கிறேன். இவைசம்பந்தமாக என் அனுபவங்கள் பசுமையானவை. ஜெனரல் போஸ்டாபீஸ், பாதாள ரயில்வே, ஸ்காட்லாந்து யார்ட் முதலான இடங்களிலும், ஒலிம்பிக்கண்காட்சியில் மன்னர்பிரான் விஜயம் செய்தபோதும் புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன். இந்த இடங்களில் பொதுஜனங்களை அனுமதிப்பதில் மிகுந்த கட்டுப்பாடுகள் உண்டு என்பதை நினைவில் வைத்துக்கொண்டு என்னைப் போன்ற—புதியவன்—அந்நியன் இவ்விடங்களில் சங்கடமின்றி ஆர்வத்துடன் நடமாட முடிந்ததென்பதைக் கவனிக்கவேண்டும். எதற்குச்சொல்லுகிறேன் என்றால் அந்தஸ்து, நிறம், ஜாதி போன்ற பாகுபாடுகளைப் புறம்பே தள்ளிவைத்து ஒருவனுடைய ஆர்வம், நடத்தை, இவற்றைப்பற்றிய அனுதாபமும் மதிப்பும் ஆதரவும் காட்ட அங்கு மக்களும் சரி, அதிகாரிகளும் சரி நன்கு பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான். நாயுடு

(11-ம் பக்கம் பார்க்க.)

சூதகத்தை நிறுத்தியது.



குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. தீமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது, ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந்திருக்கின்றனர். விலை ரூ. 3 நாட்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிக்க கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93, ChinaBazaar Rd. MADRAS.

ஆசிய மகாநாடு பற்றி பாரதியின் தீர்க்க தர்சனம்

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்த மகாகவிஞன் கண்ட கனவு இன்று பலித்தது அன்று அவன் கண்டது கனவு மாத்திரம் அல்ல. சுதந்திர பாரதத்திற்கு அவன் இட்ட கட்டளை அது. அது இன்று நிறைவேற்றப்படுகிறது. சுதந்திர பாரதத்தின் தலை நகரான டில்லி மாநகரிலே.

யார் அந்தக்கவிஞன்? அவன் கண்ட கனவு என்ன? அவன் இட்ட கட்டளைதான் என்ன? என்பதை அறிய வேண்டாமா? எவராக இருக்கக்கூடும்? தமிழ் நாட்டு மகாகவிஞன் பாரதியைத் தவிர.

நம்ம பாரதியாரா! என்ன சொன்னார் என்று ஆச்சரியமும் பெருமிதமும் கலந்து நிற்க கேட்கத்துடிக்கிறீர்கள் அல்லவா? கேளுங்கள். நன்ருகக் கேளுங்கள்.

"இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும். அடையத்தான் போகிறது. மார்க்கமும் இதுதான்" என்று திட்டவட்டமாகச் சொன்னார். "நெருங்கிய பயன்சேர் ஒத்துழையாமை நெறியினால் இந்தியாவிற்கு வரும் கதியை நீ வகுத்துவிட்டாய்" என்று காந்திஜீயைப்பற்றி தன் பாராட்டுதலை தெரிவிக்கிருர்.

"தருமமே உருவான காந்தி மகாத்மாவை அரசியலிலும் பிறஇயல் அனைத்திலும்தலைவராக இந்தியமக்கள் கொண்டுவிட்டனர். தருமவழியில்செல்பவருக்கு வெற்றிநிச்சயம்எனவேதம்சொல்லியிருக்கிறபடியால் நான் இதை சொல்லுகிறேன். படைபலம் வைத்து, அடக்கி ஆட்சி செய்பவர்கள் செருக்கழிந்து போவார்கள். கற்ருேர் தலைப்படக் காண்போம் விரைவிலே" என்று எக்காளம் கூறி வெற்றி சங்கு ஊதுகின்ருர். அது மாத்திரமல்ல "பாரதநாடு ஞாயம், தர்மம், நீதி இவைகளுக்காக உலகத்தில் தலைமை வகித்து செயல் ஆற்றவும் அதைத் தகுதி செய்துவிட்டாய்" என மகாத்மாவை துதிக்கிருர். "காந்திசொல் கேட்டார் காண் பார் விடுதலை கணத்திலுள்ளே" என்று மார்க்கமும் போதிக்கிருர். போதுமா! அவர் இட்ட கட்டளை என்ன, அதை சுதந்திர பாரதம் எப்படி நிறைவேற்றி விட்டது என்பதையும் கவனிப்போம்.

"என் தாய்நாடே நீ சுதந்திரம் அடைவதுமாத்திரம் போதாது" என்று தன்பேராசையைத் தெரிவிக்கிருர் கவிஞர் பிரான். என்ன அந்தப் பேராசை "மணிநகை புரிந்து திகழ் திருக்கோலம் கண்டு நான் மகிழ்வுறுமாறு என் கண்முன்னே வருவாய் பாரததேவியே" என அழைக்கிருர். எத்தகையமணிநகை தெரியுமா? கவிஞர் கண்ட கனவும் பேராசையும், இட்ட கட்டளையும் இது தான். "துணை நினை வேண்டு நாட்டினர்க்கெல்லாந் துயர் கெடவிடுதலை யருளி மணி நகைபுரிந்து நீ வரவேண்டு"மெனத் தெரிவிக்கிருர்.

அதோ பாருங்கள் டில்லிமாநகரிலே சுதந்திர பாரதத்தின் துணையைநாடி தன் விடுதலையைப்பெறத்துடிதுடித்து நிற்கும் இந்தோனேஷ்யா. இந்தோனேஷ்யாவின் விடுதலைக்காக ஆசியமக்கள் மகாநாட்டை கூட்டும் சுதந்திர இந்தியாவின் தலைவர் பண்டிதநேரு-இந்தியாவின் தலைமையில் அணிவகுத்து நிற்கும் ஆசிய தேசங்களின் ராஜதந்திரிகள் பிரமுகர்கள்.

அவர்களை வரவேற்று தர்ம உபதேசம் செய்யும் நேருவின் தொனியிலே கேளுங்கள் மகாத்மாவின் குரல் கேட்கிறது. மாகவிஞன் பாரதியின் கனவு நனவாகிறது. அவன் இட்ட கட்டளை நிறைவேற்றப்படுகிறது. இந்தோனேஷ்யா மக்களின் சுதந்திரத்தை ஈட்டித்தர கர்மவீரன் நேருவின் தலைமையிலே மகாநா கூடியது.

தர்ம வழியிலே செல்பவர்களுக்கு வெற்றி நிச்சயம் என வேதத்தில் சொல்லப்பட்டிருப்பதாக அன்று நமக்குப் பாரதி சொன்ன சொல் நமது தமிழ் குரலாக உலகத்துராஜதந்திரிகள் காதுகளிலே விழட்டும். அது அவர்களுக்கு நம்பிக்கையூட்டும். நமதுதமிழ்கவிஞர்பிரான் மனது இதைக்கண்டு பேரானந்தம் அடையுமென்பதில் என்ன சந்தேகம்

—அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தர்களான ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண பண்டார— சன்னிதிகள் மகா சன்னிதானமவர்கள் 5—2—49 அன்று நடைபெற்ற ஆதீன ஸ்தாபகாசாரியாள் குருபூஜை தினத்தில் பட்டணப்பிரவேசம்.

திருவாவடுதுறை ஆதீன ஸ்தாபகர் தின விழா

சைவம் தழைத்த தமிழ் நாட்டின் ஆசார்ய பீடங்களில் திருவாவடுதுறை ஆதீனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீபஞ்சாக்கரஸ்வாமிகள் என்னும் ஸ்ரீநமசிவாய குருமூர்த்தியின் குருபூஜை இவ்வாண்டு 5—2—49-ல் சிறப்புற நடைபெற்றது.

மடாலயங்கள் இன்று சட்டசபையிலும்வெளியிலும்பெருத்த ஆராய்ச்சிக்கும் சர்ச்சைக்கும் பாத்திரமாகியிருப்பதனாலோ என்னவோ வழக்கத்தைவிட அதிகமான பக்தர்கள் குருபூஜைக்கு வந்து வணக்கம் செலுத்தினர். ஒருவாரமாகவே சைவபெரியார்களும், அறிஞர்களும் மடாலயக் கொலுமண்டபத்தில் அறிவுரையாற்றினர். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, கே. எம். பாலசுப்ரமண்யம்போன்ற அறிஞர்கள் பல பொருள் மொழிகள் பற்றிப் பேசினர்.

குருபூஜையன்று மாலை திருவாவடுதுறை ஸ்ரீ வெங்கட்ராம பிள்ளை இன்னிசை அரங்கு, கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பிடில், தஞ்சை நாகராஜ பிள்ளை மிருதங்கம், மனுர்குடி ஆறுமுகம் பிள்ளை கஞ்சிரா இவற்றுடன் நடை பெற்றது.

மஹாசந்நிதானம் அவர்களின் பட்டினப்பிரவேசக் காட்சி சிறப்பாக நடைபெற்றது. தமிழ் நாட்டின் இசைக் கருவிகளில தனிச் சிறப்புடைய நாதஸ்வரப் பொழிவுகர்ணமிர்தமாயிருந்தது வேறெங்கும் ஒருங்கு சேர்த்துக் கேட்க முடியாத நாதஸ்வர வித்வான்களின் கோஷ்டியை இந்த சந்தர்ப்பத்தில்மட்டுமே கேட்க முடியும் டி. என். ராஜரத்னம், பி. எஸ். வீருசாமி, திருவீழிமிழலை சகோதரர்கள், செம்பனார் கோயில் சகோதரர்கள், முதலியோர் ஒருங்கு வாசிக்கக்கேட்பதென்ருல் அது மகத்தானவாய்ப்பல்லவா? நீடாமங்கலம் மீனுக்ஷி சுந்தரம், வெங்கடேசன், ஷண்முகம், ராமதாஸ், ஷண்முகவேல் ஆகியோர் தவுல வாசித்தார்கள்.

விழாவின இறுதியில் சந்நிதானம் அவர்கள திருக்கொலுவீற்றிருந்து பக்தர்களின் பூஜையை ஏற்றுக்கொண்டார்.

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு:— "பாபு ஹால்" சைனபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 13—2—49

திருச்சியில் கண்காட்சி

திருச்சி நகர சபையார் 7—2—49-ல் சுதேசிப் பொருட் காட்சியொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். தொடர்ந்து மூன்று வாரங்கள் நடைபெறுமென்று தெரிகிறது. ஈரோட்டு நகர சபையாரும் இத்தகைய பொருட் காட்சி ஒன்றை நடத்த விரும்புகிறார்களென்று தெரிகிறது.

திருச்சி நகரில் இதற்கு முன்பே இப்படிப் பல கண்காட்சிகள் நடைபெற்றிருக்கின்றன. காலஞ்சென்ற தேவர் அவர்கள் இவற்றில் அதிக ஊக்கம் காட்டி நடத்திவைத்திருக்கிறார். புலாபாய் தேசாய் பாபு ராஜேந்திரப் பிரசாத்போன்ற தலைவர்கள் அவற்றைத் திறந்து வைத்திருக்கின்றனர்.

கண்காட்சிகளைநடத்தவேண்டுமென்ற எண்ணம் நமது நகர சபையினருக்கு ஏற்பட்டுப் பல மாதங்களான பிறகு ஒருதடவை நாள் குறிப்பிடப்பட்டு அது ஒத்திவைக்கப்பட்டு இப்போது அது உருப்பெற்றிருக்கிறது.

கண்காட்சிகளை நடத்துவதென்பது கல்வித்துறையிலும் வர்த்தகத்துறையிலும் கலைத் துறையிலும் இன்றியமையாததொன்றாகும்

பல்வேறு இடங்களின் கைத்தொழிற் சிறப்பையும் கலைச் சிறப்பையும் நாம் அறிந்துகொள்ளக்கண் காட்சிகள் உதவுகின்றன. பொழுதுபோக்கும் நேரத்தில் பயனுள்ள எளிய கைத்தொழில்களை மேற்கொள்வதில் உற்சாகமும் ஊக்கமும் நமக்குத் தருவன. பல புதிய செய்திகளையும் பொருள்களையும் தெரிந்துகொள்ள வசதியுண்டு.

பல்வேறு கல்வித்திட்டங்களையும், சமூகத் தொண்டையும் அறிவிக்கும் ஏற்பாடுகள் காட்சி சாலையில் முக்யமாக இருக்க வேண்டும். விஞ்ஞான அற்புதங்களை அறிந்துகொள்ளும் காட்சிகளைச்சேகரம்செய்யலாம்.

இந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற கண்காட்சிகள் எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்கியதைப்பார்க்கும்போது தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களிலெல்லாம் அவ்வப்போது கண்காட்சிகள் நடத்தவேண்டுமென்று தோன்றுகிறது. ஒரு கண்காட்சியை நடத்தவேண்டுமானால் வெறும் குஜிலிக்கடைக் கூட்டமாக ஆக்கிவிடக்கூடாது. பொருப்பாலான இத்தகைய கண்காட்சிகள் திருவிழாக் கடைகளாகவே அமைந்துவிடுகின்றன. வளையல் கடை பனிரண்டு, சீப்பு சோப்பு பவுடர், வாசனைத் தைலம், ஊறுகாய், குளைக்கட்டி மருந்துகளாக நிறைத்துவிட்டால் போதாது. தொழிற்சாலை, கலைக்கூடம், விஞ்ஞான விளக்கம் இவற்றின் மாதிரி இயக்கங்கள் நல்ல அறிவும் படிப்பினையும் தரக்கூடியவையாக இருப்பது பயன் தரும்.

நெடுங்காலத்துக்குப் பிறகு ஒரு முயற்சி என்றவகையில் இது பாராட்டுக்குரியதுதான். திறந்துவைத்த டாக்டர் ராஜன், பெண்களின் சமூக சேவை சம்பந்தமாக சில காட்சிகள் இருந்திருக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்.

ஆண்டுதோறும் இப்படிக் காட்சிகளை நடத்தும் முயற்சியை நகர சபையார் மேற்கொண்டால் நல்ல ஆதரவு கிடைக்கும். திருச்சி நகர சபைத் தலைவர் ஒரு அருமையான யோசனையை வெளியிட்டிருக்கிறார் திருச்சி சரித்திரப் பிரசித்திவாய்ந்த இடமாகையால், இந்த ஜில்லாவில் உள்ள நகரசபைகளின் ஒருமித்த ஆதரவினமூலம் நிரந்தரமான ஒரு காட்சி சாலையை இங்கு அமைக்கலாம் என்பதே.

நிரந்தரமான ஒரு காட்சிசாலை மிகவும் பயனுடையதாகும். இதற்கு நகரசபைகள் உதவுவது மட்டும் போதாது. பெரிய கலாசாலைகள் இங்கு உள்ளன. மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உலகத்துப்பொது அறிவை வளர்க்கக்கூடிய காட்சி சாலை ஒன்றை அமைக்கசென்னை அரசாங்கத்தாரும் போதிய உதவி செய்தால் அது வெற்றிகரமானதாக இருக்கும்.

தண்ணீர் கஷ்டம்

திருச்சியில் ஏன் இந்தத் தண்ணீர் கஷ்டம் என்பதை இதுவரையில் பொதுமக்கள் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லையல்லவா? பொன்னி பாயும் சோழநாட்டில் அதுவும் திருச்சியில் தண்ணீர் கஷ்டமென்றால் நம்பக்கூட முடியாததுதான். இதற்குரிய காரணத்தை நகர சபைத் தலைவர் சமீபத்தில் திருச்சிக்கு விஜயம் செய்த மத்ய சர்க்கார் ரயில்வே மந்திரி சந்தானம் அவர்களிடம் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் தெளிவுபடுத்தியிருப்பதுடன், கண்காட்சியைத் திறந்துவைத்த நமது நகரத்து டாக்டர் ராஜன் அவர்களிடமும் கூறியிருக்கிறார். சுமார் 70 ஆயிரம் ஜனத்தொகை திருச்சியில் இருந்த காலத்துக் குழாய்த் திட்டமே இரட்டத்தட்ட 3-லட்சம் பேருள்ள இன்றைய நிலையிலும் மாறுமலிருப்பது ஒரு காரணம். அதைவிட நகரசபையார் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது நெருக்கடியில் தென்னிந்திய ரயில்வேக் கார்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் சிக்குண்டு இன்றும் தினசரி லக்ஷம் காலன் தண்ணீர் ரயில்வேக்கு சப்ளை செய்தாக வேண்டிய கடமையில் இருக்கிறார்கள், இந்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது ரயில்வேக்குத் தனியாக நீர் வசதி கிடையாது. ஆனால் இப்போது ரயில்வேக்குத் தண்ணீர் தனி வசதி ஏற்பட்டுவிட்டபிறகும்கூட அவர்கள் ஒப்பந்தப்படி உள்ள உரிமையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு லக்ஷம் காலன் தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். அதை அவர்கள் விட்டுக்கொடுத்தால் ஓரளவு தண்ணீர்க் கஷ்டம் பொதுமக்களுக்குக் குறைந்துவிடும். முனபு ரயில்வே ஒரு வர்த்தக ஸ்தாபனமாக இருந்தது. பின்னாளில் இது பெயர்ந்து போய் அரசாங்க உடமை— அதாவது பொதுமக்கள் சொத்தாக ஆகிவிட்டது. இனியும் பழைய ஒப்பந்தத்தை அவசியமில்லாமல் அவர்கள் — ரயில் இலாகா — வற்புறுத்துவது அர்த்தமற்றது. இதற்குத்தக்க கிளர்ச்சிசெய்து விடுதலை காண வேண்டும்.

நாமக்கல் கவிஞர்

தேசியக்கவி என்று புகழ் படைத்த நாமக்கல் வெ. ராமலிங்கம்பிள்ளை அவர்களுக்குக் கோவை மக்கள் பத்தாயிர ரூபாய் கொண்ட பொற்கிழியளித்துப் பெருமையடைந்திருக்கிறார்கள். தமிழ் ஆர்வம் திரு, ஆர் கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கி அரியதோர் சொற் பெருக்காற்றியிருக்கிறார்.

முன்னாளில் தமிழ்க்கவிஞர்களைத் தமிழ் அறிந்த மன்னர் பலர் ஆதரித்துப் போற்றி அரிய இலக்கியங்கள் தோன்றத் தொண்டு புரிந்திருக்கிறார்கள். இன்னாளில் முடிமன்னர்கள் இல்லை. ஜனநாயகக் கொள்கை பரவிவரும் காலத்தில் பொது மக்களே ஒரு நாட்டின் மன்னர்கள். எனவே கவிஞர்கள் தங்கள் மரபு வழுவாமல் இந் நாட்டு மன்னர்களான பொது மக்களையும் அவர்களின் நன்மையையும் நல்வாழ்வையும் மட்டுமே பாடவேண்டியவர் ஆகிறார்கள். இந்த வழியில் அடியெடுத்துக் கொடுத்தவர் பாரதியார். அவரைப் பின்பற்றி இந்த நாட்டில் தோன்றிவரும் கவிஞர்கள் பொதுமக்களின் நன்மைக்கே பாட்டிசைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சுதந்திரப் போர் நடைபெற்ற காலத்தில் நாமக்கல் கவிஞர் அவர்களின் தேசியப் பாடல்கள் பெரும் உதவியாக இருந்தன, அவர் பாடியது மட்டுமின்றி, அதன் பயனை விடுதலையின்பத்தையும் நேரே காணும் பாக்கியமும் படைத்திருக்கிறார். அவரைச் சிறப்பித்த மக்கள் தங்களையே சிறப்பித்துக்கொண்டார்கள் என்பதில் ஐயமுண்டோ ?

முத்துரங்க முதலியார்

சென்ற பிப்ரவரி ஐந்தாம்தேதியன்று நமது மாகாண மேல் சபை அங்கத்தினரும் வெகு நாளைய காங்கிரஸ் காரருமான திரு. முத்துரங்க முதலியாரவர்கள் நோய்வாய்ப்பட்டு மறைந்தார்.

முதலியாரவர்கள் செங்கல்பட்டில் ஒரு பெரிய மிராசுதார். ஆரம்பத்தில் தீவிர ஸ்வராஜ்யக் கட்சி அங்கத்தினராயிருந்தார். 1926-ல் சென்னை மேல்சபையில் அங்கத்தினர் ஆனார். 1927-ல் டாக்டர் அன்சாரி தலைமையில் நடந்த சென்னை காங்கிரசின் வரவேற்புக் கமிட்டித் தலைவராகயிருந்தார்.

காலஞ்சென்ற எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்களுடன் அரசியலில் ஒத்துழைத்ததுடன், சென்னை மகாஜன சபையின் காரியதரிசியாகவும், 1934-ம் ஆண்டில் அதன் தலைவராகவும் இருந்தார் முதலியார்.

சத்யாக்கிரக இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டதுடன் பன்முறை சிறை சென்றிருக்கிறார். இரண்டுதடவை தமிழ்நாடு காங்கிரசுக்கு தலைவராக இருந்திருக்கிறார். மத்திய சட்டசபையிலும் அங்கத்தினராயிருந்திருக்கிறார். செங்கல்பட்டு ஜில்லாவில் பல கோயில்களுக்கு தர்மகர்த்தாவாகவும இருந்திருக்கிறார்.

முத்துரங்க முதலியாரின் மறைவு தமிழ் நாட்டில் காங்கிரஸ் இயக்கத்துக்குப் பெரு நஷ்டமேயாகும்.

அரியலூர் டி. மு. கோர்ட்

S. C. 973 of 1948

P. தேவதாஸ் ரெட்டியார்—வாதி

1. கண்ணுசாமி நாயக்கர்
2. பொன்னுசாமி நாயக்கர்

—பிரதிவாதிகள்

இதனால் தெரிவிப்பது யாதெனில் ஷை நம்பர் வாதி P. தேவதாஸ் ரெட்டியாருக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த புரோநோட்டுப்படி அசல வட்டியுள்பட தனக்கு கிடைக்கவேணுமாய்க்கண்டு ஷை நம்பரில் வாதி தாவாசெய்து ஷை தாவா 14—2—49 தேதி ஈரங்கி ஏற்பட்டிருக்கிறது. கக்ஷியுள்ளவர்கள் ஷை ஈரங்கி தேதியில் அரியலூர் டி. மு. கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்.

R. Ragunathachari,
Pleader for Plaintiff.

அரியலூர்
5-2-49

காந்திஜி கொலை வழக்குத் தீர்ப்பு

மகாத்மாவைச் சுட்ட நாதுராம் விநாயக கோட்ஸே, அதற்கு உதவி புரிந்த நாராயண ஆப்தே ஆகிய இருவருக்கும் மரண தண்டனை விதித்து ஸ்பெஷல் ஜட்ஜ் ஸ்ரீ ஆத்ம சரண் 10—2—49 அன்று தீர்ப்புக் கூறினர்.

வி. ஆர் கர்க்கரே, மதன்லால் பஹாவா, சங்கர கிஷ்டய்யா, கோபால கோட்ஸே, டாக்டர் பர்ச்சூரே ஆகிய ஐந்து பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது.

ஏழாவது எதிரியாகிய விநாக தாமோதர ஸாவர்க்கர் நிரபராதி என்று முடிவு செய்து நீதிபதி அவரை விடுதலை செய்தார்.

அப்ரூவர் பாட்கே மன்னிப்புப்பெற்று குற்றச் சாட்டின்றி விடுவிக்கப்பட்டார்.

சங்கர கிஷ்டய்யாவுக்கு தீவாந்தர தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், அதை ஏழு வருஷச் சிறைத் தண்டனையாகக் குறைக்கலாமென நீதிபதி சிபாரிசு செய்துள்ளார்.

தம்மைப் பற்றிய தீர்ப்பைக் கேட்பதற்காக எல்லா எதிரிகளும் ஒவ்வொருவராக எழுந்து நின்றனர்.

தீர்ப்புக் கூறப்பட்டபோது எதிரிகள் எவ்வித உணர்ச்சியும் காண்பிக்கவில்லை.

அப்பீல் செய்துகொள்வதாக இருந்தால், 15 தினங்களுக்குள் அப்பீல் மனு தாக்கலாக வேண்டுமென நீதிபதி அறிவித்தார். தீர்ப்பின் நகல்கள் தயாராயிருப்பதாகவும், பிரதிகளை இப்பொழுதே பெற்றுக் கொள்ளலாமென்று அவர் கூறினர்.

தீர்ப்பை அளித்துவிட்டு நீதிபதி வெளியேறினர். பிறகு தண்டனையடைந்த எதிரிகள் சிறைக்குக் கொண்டுபோகப் பட்டனர்.

அப்பொழுது அவர்கள் "ஹிந்து தர்மத்துக்கு ஜே!" "பாகிஸ்தானை ஒழிப்போம்!" "ஹிந்தி! ஹிந்து! ஹிந்துஸ்தான்" "ஹிந்துஸ்தான் நீடூழி வாழ்க" "அகண்டபாரத் நீடூழி வாழ்க" "பாகிஸ்தான் ஒழிக" என்ற கோஷங்களையும், இன்னும் சில கோஷங்களையும் கிளப்பினர்.

காந்திஜி கொலை வழக்கு சம்பந்தமாகத் தீர்ப்பளித்த விசேஷ நீதிபதி ஸ்ரீ ஆத்மசரண் கடைசியில் போலீஸாரின் அசிரத்தையை பற்றிக் குறிப்பிட்டார். 1948 ஜனவரி 20-ந்தேதிக்கும் 30-ந் தேதிக்கும் இடையே போலீஸார் உஷாராக இருந்திருந்தால் கொலையைத் தவிர்த்திருக்கலாம் என்றும் அவர் சொன்னர்.

காந்திஜி கொலை வழக்கு வரலாறு

மஹாத்மா காந்தி கொலை வழக்கு வரலாறு கீழே தரப்படுகிறது.

மொத்தம் 12 பேர் இவ்வழக்கில் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டனர். இவர்களுள் திகம்பர ராமச்சந்திர பாடகே என்பவர் விசாரணை ஆரம்பத்தில் அப்ரூவராக மாறி மன்னரின் மன்னிப்பைப் பெற்றார்.

கங்காதர் தன்வாட்டே, கங்காதார் ஜாதன், சூரியதேவ் சர்மா என்ற மூன்று பேர் தலைமறைவாக இருந்துவருகிறார்கள்.

மற்ற எட்டு எதிரிகள் வருமாறு:-

(1) நாதுராம் வினயக் கோட்ஸே (37 வயது)

(2) நாராயண தத்தாத்ரய ஆப்டே (34)

(3) விஷ்னு ராமச்சந்திர கர்கரே (37)

(4) மதன்லால் காஷ்மீரிலால் பாஹ்வா (20)

(5) சங்கர் கிஷ்டையா (20)

(6) கோபால் வினயக் கோட்ஸே (27)

(7) வினயக தாமோதர சாவர்க்கர் (65)

(8) தத்தாத்ரய சதாசிவ பர்ச்சரே (49)

1. நாதுராம் கோட்ஸே:- கொலை செய்தது, கொலைக்கு சதி செய்தது, சட்டவிரோதமாக ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் வைத்திருந்தது.

2. ஆப்டே கொலைக்கு உடந்தை, கொலைக்கு சதி செய்தது, சட்ட விரோதமாக ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் வைத்திருந்தது.

3. கர்கரே கொலைக்கு உடந்தை, சட்ட விரோதமாக ஆயுதங்களையும் வெடி மருந்தையும் வெடிப் பொருட்களையும் வைத்திருந்தது.

4. மதன்லால் கொலைக்கு உடந்தை, கொலைக்கு சதி செய்தது, சட்ட விரோதமாக ஆயுதங்களையும், வெடிமருந்தையும், வெடிப்பொருட்களையும் வைத்திருந்தது. உயிருக்கு அபாயமும் சொத்துக்குப் பெருஞ்சேதமும் விளைவிக்கும் ரீதியில் வெடி குண்டை வீசியது.

5. சங்கர் கிஷ்டையா: கொலைக்கு உடந்தை: கொலைக்கு சதிசெய்தது; சட்டவிரோதமாக ஆயுதங்களையும் வெடிமருந்தையும் வெடிப் பொருட்களையும் வைத்திருந்தது.

6. கோபால்கோட்ஸே; கொலைக்கு உடந்தை கொலைக்கு சதிசெய்தது. சட்ட விரோதமாக ஆயுதஙகளையும் வெடிமருந்தையும, வெடிப் பொருட்களையும் வைத்திருந்தது.

7. சாவர்க்கர் கொலைக்கு உடந்தை, கொலைக்கு சதி செய்தது.

8. பர்ச்சரே கொலைக்கு உடந்தை, ஆயுதங்களையும், வெடிமருந்தையும கொண்டுசெலல உடந்தை.

அரியலூர் டி. மு. கோர்ட்டு
S. C. No. 950/48

கே. கி. பெருமாள் செட்டியார்
—வாதி

1. ஆளவந்தார் செட்டியார்
2. ராஜகோபால் செட்டியார்
3. கலியபெருமாள் செட்டியார்
—பிரதிவாதிகள்

ஷை 1-ம் பிரதிவாதியாலும், பிரவாதிகள் அவிபக்த தகப்பன் பாபு செட்டியாராலும் சேர்ந்து ஷை வாதிக்கு தாது-ளு மார்கழி மீ 20-ந்தேதி (3—1—1937) ரூ. 69-8-0க்கு எழுதிக்கொடுக்கப்பட்ட நோட்டின் பேரில் ரூ. 100-0-0க்கு தாவா செய்து ஷை தாவா 24—2—49-ல் ஈரங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆட்சேபணை இருந்தால் அன்று ஆஜராகி தெரிவித்துக்கொள்ளவும்.

M. V. Swaminatha Aiyer,
10-2-49 வாதி வக்கீல்.

✱

அனுபவஞானி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதை நாம் மறக்க முடியாது.

நம்முடைய நாட்டில் மக்கள் லஞ்சம் கொடுப்பதனல் தான் அதிகாரிகள் வாங்குகிறார்கள் என்று வாதிக்கப்படுகிறது. கொடுக்காவிட்டால் வாங்கமாட்டார்கள் அல்லவா என்றவாதம் மேலுக்கு மிகவும் சரியானதாகவே காணப்படலாம். ஜனங்கள் ஏன் கொடுக்கிறார்கள் என்பதைக் கவனித்தால் இந்தவாதம் தவறானதென்று தெரிந்துபோகும், நீதியும், உதவியும், தகுதிக்கு ஏற்பப்பெற முடியும் என்ற நம்பிக்கையை அரசாங்கம் ஏற்படுத்தினல், அரசாங்க அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைக் கெடுத்துத்தான் தீருவோம் என்று யாராவது சொல்வார்களா? பர்மிட், லைசென்ஸ் எந்த எழவானலும் நியாயப்படி கிடைப்பதில்லையென்றல் அவசர அவசியத்தால் குறுக்குவழியில் அதைக்காத்துக்கொள்ள மக்கள் முனைவது மிகவும் இயற்கை. அநீதியை எதிர்த்துக் கஷ்டநஷ்டங்களை வலுவில் ஏற்றுக் கொள்ள எததனைபேருக்கு வசதியும் நேரமும் இருக்கிறது. அனைவர்கள் நன்மைக்கும் என்ற அடிப்படையில் இயங்கவேண்டுமென்ற நியதியுடைய ஒரு அரசாங்க இயந்திரத்தை தனிப்பட்ட மனிதர்கள் தியாகம் செய்து தான் சீர்திருத்தவேண்டுமென்றல் அத்தகைய அரசாங்கம் ஒன்று எதற்காக இருக்க வேண்டும். எனவே அரசாங்க தலைமைப் பீடத்தில் உள்ளவர்கள் கண்டிப்பாகவும் நேர்மையாகவும் நடந்து அரசாங்க இயந்திரத்தை செப்பனிட்டாலன்றி ஒரு நாடு விடுதலையடைந்தாலும் அந்த விடுதலை நிலைப்பதாகவோ, பயனுடையதாகவோ இருக்காது.

✱

சிறுகதை

வேலை நிறுத்தம்

ரா. பட்டு

அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணி இருக்கும் அன்றைய வார இதழைப் புரட்டிக்கொண்டிருந்தேன். என் சகதர்மிணி குமுதம் உள்ளே அக்கினிபகவானுடன் போராடிக் கொண்டிருந்தாள்—அதாவது பச்சை விறகுடன் போட்டியிட்டாள் குமுதம். ஆனால் இவள் சிரமத்தை அந்த விறகு சிறிதேனும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"நல்ல விறகுடீ இது என் கண்களைக் குருடாக்கரத்துக்கு" என்ற குரல் கேட்டு என் கவனம் அவள்பால் சென்றது. புகை வரவர மெதுவாகக் கூடத்திற்கும் பரவியது. கட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த சுசீலா புகை பொறுக்க மாட்டாமல் வீறிட்டுக் கொண்டே எழுந்தாள்.

வாசலில் குழந்தையுடன் பேசிக்கொண்டிருந்தாள் குமுதம் "ஏண்டி அழுரே! போய் உங்கப்பா கிட்டே நல்ல விறகா வாங்கிண்டு தந்தாத்தான் இன்னிக்கு காபி, சாதம் எல்லாம்னு சொல்லு. சொல்லு, இல்லேன்னே காபி, ஜீபிதான்" என்றாள்.

குமுதம் என்னுடன் பேசுவதை ஸ்ட்ரைக் செய்து ஒரு வாரம் ஆயிற்று. காலை எழு மணிக்கு எழுந்திருந்தால் வெந்நீர் தயாராயிருக்கும். குளித்து சட்டையை மாட்டிக்கொண்டு ஒருவாய் காபியையும் குடித்துவிட்டு ஆபீஸுக்குப் புறப்பட்டு விடுவேன். தெருக் கோடியில் சென்று திரும்பினால் குமுதம் வாயிற்படியில் நின்று என்னையே பார்த்துக்கொண்டிருப்பது தெரியும்.

இந்தச் சச்சரவுக்குக் காரணம் ஒரு தீப்பெட்டிதான். அன்று 28-ந் தேதி, ஆபீஸில் காரியம் முடியவில்லை. ஒரு குமாஸ்தாவை நம்பியதின் பலனாக மானேஜரின் கோபத்துக்கும் ஆளாயிருந்தேன். சாயந்திரம் எரிச்சலுடன் வேகமாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். அவசரத்தில், கோபத்தின்போக்கில் வழியில் ஒரு கல் தடுக்கி என் கால் கட்டைவிரலைப் பதம் பார்த்திருந்தது. சொல்லொணு எரிச்சலுடன் வீட்டுக்கு வந்தேன். அங்கு கண்ட காட்சி என் கோபத்தை மேலும் தூண்டிவிட்டது. அன்றும் இப்படித்தான் அடுப்பு பற்றுமல் சமையல் செய்யத் திண்டாடிக்கொண்டிருந்தாள் குமுதம். புகை வீடு பூராவும் பரவிக் கிடந்தது. எனக்கு வந்த கோபத்தில் "இது என்ன தரித்திரம். அடுப்பைக் கூடவா சரியாக எரியவைக்க முடியவில்லை" என்றுகத்தினேன்.

"ஆமாம் நீங்கள் வாங்கிக் கொண்டுவந்த விறகின் லட்சணம் தானிப்படி. காசைத் தரித்திரம் பண்ணப்பண்ண விறகும் தரித்திரமாத்தான் இருக்கு, பற்றவைக்க நெருப்புப் பெட்டியில் ஒரு குச்சிகூட இல்லை நானும் மூணுநாளாச் சொல்றேன்" என்றாள் குமுதம்.

"வாஸ்தவம், அவள் சொல்வது சரிதான். ஊரில் விறகு ரேஷன், தீப்பெட்டி ரேஷன், ஒரு கடையில்கூடக் கிடைக்கவில்லை. தட்டுத் தடுமாறி விறகு வாங்கி வந்தேன். அதுவும் பச்சை. ஆனால் அதுகூடக் கிடைக்கவில்லையே! வேறுவழி? தீப்பெட்டிக்கும் அலைந்துகொண்டுதான் இருக்கிறேன். 'ஒண்ணும்தேதி வந்தால் வாங்கிக்கொண்டு போகலாம்' என்று ரேஷன் கடைக்காரன் சொலகிறான். கிடைக்காவிட்டால் அதற்கு நானு பொறுப்பாளி. அதுவும் தீப்பெட்டியின் அருமை தெரியாமல் கிழித்துத் தள்ளினால்......" இப்படி நினைத்தது என் மனம் "ஆமாம் நீ ஒரு நாளைக்கு ஒரு பெட்டி கிழித்துத்தள்ளு. பெட்டி நிறைய குச்சி இருந்துகொண்டே இருக்கும். கொஞ்சமாவது மூளை இருக்கணும்" என்றேன்.

'ஆமாம்! எனக்கு மூளை இல்லாவிட்டால்போகிறது உங்களுக்கு இருந்துதான் இந்தப் பச்சை விறகை வாங்கிண்டு வந்தீர்களாக்கும்" என்றாள் குமுதம்.

எனக்குக் கோபம் எல்லை மீறியது "சீ கழுதை! எதிர்த்துப் பேசக்கூட ஆரம்பிச்சூட்டியா? நீயே போய் தீப்பெட்டியும், விறகும் வாங்கிண்டுவா. அப்ப தெரியும் அதன் அருமை" என்று காசை விட்டெறிந்துவிட்டு விடுவிடென்று வெளியில் சென்றுவிட்டேன்.

இரவு எட்டு மணிக்குத்தான் வீட்டுக்குவந்தேன். வீடு வெறிச்சென்றிருந்தது. என் மனம் திடுக்கிட்டது. அவள்மேல பச்சாத்தாபப்பட்டேன். என்ன இருந்தாலும் ஒரு தீப்பெட்டிக்காக நான் அவ்வளவு கோபப்பட்டிருக்கவேண்டியதில்லை. அவளும் தான் என்ன செய்வாள் பாவம்! ஒருநாளைப் போல் பச்சை விறகை எரியவைக்க வேண்டுமென்றால்....... ஆனால் மூளை இல்லையென்று சொன்னேனே! அவ்வளவு அகம்பாவம் அவளுக்கு...... இப்படி மாறி மாறி எண்ணியது என் மனம். சமையற்கட்டில் சாதம் வடித்தது வடித்தபடி இருந்தது சுசீலாவையும் காணோம். பின் கட்டு, ஹால் எல்லாம் தேடியாய் விட்டது. காணோம். ஒருவேளை கிணற்றில்...... இருக்காது, அவள் மிகவும் பொறுமைதான். ஆனால் அன்று ஏதோ எரிச்சலில் அப்படிப் பேசிவிட்டாள். கடைசியாக படுக்கையறைக்குள் சென்றேன். சுசீலாவை அணைத்தபடி அங்குப் படுத்திருந்தாள். கன்னங்களில் நீர் வழிந்த தாரை நன்றாகத் தெரிந்தது. அழுதிருக்கிறாள் போலிருக்கிறது. மெதுவாக வெளியில் வந்தேன். சாப்பிடலாமா வேண்டாமா என்று யோசனை செய்தது என் மனம். சாயந்திரமே காபி கிடையாது, வயிற்றை என்னவோ செய்தது. மறுபடியும் கோபம்தான் வந்தது.

"அதற்குள் தூக்கமா? வெளியில் போனவன் திரும்பி வரமாட்டானென்று எண்ணமா? இருக்கட்டும்" என்று நினைத்துக்கொண்டு படுக்கையைமட்டும் சுருட்டி எடுத்துவந்து திண்ணையில் விரித்து கதவை மூடிவிட்டு படுத்துக்கொண்டேன். எப்போது தூங்கினேனோ எனக்குத் தெரியாது. அப்பா! அப்பா! என்று சுசீலா எழுப்பினாள் திடுக்கிட்டு எழுந்தேன்.

"சாதமெல்லாம் ஆறிப் போச்சு. நான்தான் அசந்துவிட்டேனால் எழுப்பக் கூடாதோ என்னை" என்று குமுதம் வாயிற்படியில் நின்றுகொண்டு கூறினாள்.

"சாதமும்வேண்டாம் ஒன்றும்வேண்டாம். நீயே சாப்பிடு" என்று கூறிவிட்டு மறுபடியும் போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்தேன். நான் படுத்துக்கொண்டுவிட்டதை யறிந்த சுசீலா எழுந்து தாயாரிடம் சென்றாள்.

"வேண்டாமென்றால் இருக்கட்டுமே, எத்தனை நாளைக்கு இப்படி பார்க்கலாம். பெண்கள் மட்டும் என்ன? ஆண்களின் கைப் பொம்மையா?' என்று குமுதம் மெதுவாக கூறிக்கொண்டு உள்ளே சென்றது லேசாக என் காதில் கேட்டது.

"அதிலிருந்து நாங்கள் இருவரும் பேசுவதை 'ஸ்ட்ரைக்' செய்திருந்தோம். ஈசி சேரில் சாய்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த எனக்கு மேற்படி ஞாபகம்தான் வந்தது. மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டேன்.

சுசீலா என்னிடம் ஓடிவந்து "அப்பா காபி" என்றாள்.

"என்னைக் கேட்டா? போயி உங்கம்மாவையே கேளு" என்றேன்.

"எங்கிட்டெ கேட்டா நான் எங்கிருந்து கொடுக்கறது. போயி உங்கப்பாவை கடையிலேயிருந்து வாங்கிண்டுவரச் சொல்லு" என்றாள் குமுதம்.

"இன்னிக்கு ஞாயித்திக்கிழமை காப்பிக்கடை கிடையாதுன்னுட்டு சொல்லுடீ ஒங்கம்மா கிட்டே" என்றேன் நான்.

"தீப்பெட்டியாவது வாங்கிண்டு வந்தாத்தான் காபி போடலாம்னு சொல்லுடீ உங்கப்பா கிட்டே" என்றாள் அவள்.

இச் சமயம் புகைகின்ற அடுப்பு எரிந்தாற்போல் தோன்றினதால் உள்ளே சென்றாள் குமுதம். புகைந்துகொண்டிருந்த அடுப்பு எரியத் தொடங்கியது. காபி போடத் தொடங்கினாள் குமுதம்.

'டக்' கென்று என் முன் வைத்த காபியை 'டபக்' கென்று ஒரே வாயில் ஊற்றிக்கொண்டு அங்கவஸ்திரத்தையும், டென்னிஸ் பாட்டையும் கையில் எடுத்துக்கொண்டு வெளியில் ஓரடி எடுத்து வைத்தேன். அப்பா அப்பா என்று கத்தினாள் சுசீலா.

"என்னடா இது அபசகுனம். போறபோது குறுக்கே" என்று உள்ளே திரும்பி 'என்னடீ' என்றேன். சுசீலா ஓடிவந்து என் காலைக் கட்டிக்கொண்டு "அப்பா சினிமா" என்றாள். "சினிமாவும் இல்லை; கினிமாவும் இல்லை. நாளைக்குப் போகலாம். வீட்டிலேயே இரு" என்று கூறிவிட்டு மறுபடியும் புறப்பட்டேன்.

"ஞாயிற்றுக்கிழமை சும்மா வீட்டிலெ இருக்கற நாள். குழந்தையும் நாலு நாளா கேக்கறது நாளைக்கு ஆபீஸிலிருந்து வந்ததும் அதுவுமாத்தான் சினிமாவுக்குப் போப்போறளாம். ஏன்? இன்னிக்குத்தான் போனு என்ன?" என்று மோட்டுவளையைப் பார்த்துக்கொண்டு கூறினாள் குமுதம்.

இச்சமயம் நான் என்ன செய்வது. ஒரு வாரமாய் பேசாமலிருந்த மனைவி இன்று அவளே பேசுகிறாள். அதுவும் நேருக்கு நேராகவும். மறைமுகமாகவுங் கூட.

"சரி போய் தலைவாரிக்கோ அம்மாவையும் ரெடியா இருக்கச் சொல்லு நான் இதோ வந்துடரேன்" என்று கூறி சுசீலாவை உள்ளே அனுப்பிவிட்டு டென்னிஸ் பாட்டை அறை வாசற்படியை நோக்கி விட்டெறிந்து விட்டு நான் தெருவில் இறங்கினேன்.

5 மணிக்கு ஒரு ஜட்காவுடன் வந்தேன், தாயும், சேயும் தலைவாரிக்கொண்டு தயாராயிருந்தனர். நானும் சட்டையை மாட்டிக்கொண்டு உடனே புறப்பட்டேன்.

சினிமா முடிந்து வெளியே வந்தோம் "சரி இப்படியே நடந்து போய்விடுவோம்" என்றாள் குமுதம். நான் உள்ளூர

(14-ம் பக்கம் பார்க்க)

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது

வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள் & விக்டரி ஸ்டார் வைரங்கள்

தயாரிப்பவர்:—
சென்னி ருதாகிருஷ்ணன்,
பெரியபஜார்,
திருச்சினுப்பள்ளி.



திரைப்பட விமர்சனம் "மூர்த்தி"

கோகுல தாசி

தயாரிப்பு — திரன் கம்பேனி
டைரக்ஷன் — (டைரக்டர்) கே. சுப்ரமணியம்.
கதை — இளங்கோவன்.
ஸ்டுடியோ — நியூடோன்.
நடிகர்கள் :— ஹொன்னப்பா பாகவதர், எம். வி. ராஜம்மா, ராமச்சந்திரன், அங்கமுத்து, லலிதா, பத்மினி.

டைரக்டர் சுப்ரமணியம் அவர்களின்படம் என்றால் ஒருகாலத்தில் அமோக வரவேற்பிருந்தது. காரணம் அவர் படத்தில் கலையழகும் கருத்துச் செறிவும் காலப்போக்கையொட்டிய கதையமைப்பும்தான். ஆனால் சில வருஷங்களாக அவர் புகழை ராகுவும் கேதுவும் கௌவிவருகின்றனர். அதுவும் இப்போது வெளியிட்டிருக்கும் 'கோகுலதாசி' யைப் பார்க்கும் போது நம்மையறியாமல் அவரிடம் அனுதாபந்தான் ஏற்படுகிறது. பழக்கத்திலிருக்கும் ஒரு நல்ல பெயரின் மயக்கத்திலேயே தன் புகழைக் காப்பாற்றிக்கொள்ளாமல் இப்படி மட்டரகமான படங்களைத் தயாரிப்பதன் மூலம் பொதுமக்களின் வெறுப்புக்கு ஆளாகும் சுப்ரமணியம் அவர்களைப் பற்றி நாம் மிகவும் வருந்துகிறோம்.

'இனி அவர் படவுலகிலிருந்து ஓய்வுபெற வேண்டியதுதான்' என்று பொதுமக்கள் பேசிக்கொள்கின்றனர். இத்தகைய படங்களால் சுப்ரமணியம் அவர்களுக்குப் பெயர் கெடுவதுடன் அவர் படத்தை ஓட்டும் கொட்டகை முதலாளிகளும் நஷ்டமும் வருத்தமும் அடைய நேரிடுகிறது.

கதை :— ஒரு கற்பனை மூட்டை. நாரதரின் மகிமையையும் குணங்களையும் மட்டமாகச் சித்தரித்திருக்கிறார் இளங்கோவன். கொஞ்ச காலமாக இளங்கோவனின் புகழ் மங்கிக் கொண்டே வருகிறது. அதற்கு இத்தகைய கற்பனைக் கதைகள்தான் காரணம் என்பது இப்போது புரிந்துவிட்டது.

வைகுண்டத்தில் வைகுந்த நாதனை தன்னைமறந்து பாடித் துதிக்கிறாள் ஒரு பெண். நாரதர் வருகிறார். எல்லாரும் உபசரிக்கின்றனர். கானத்தில் தன்னை மறந்திருக்கும் அப் பெண் உபசரிக்கவில்லை வருகிறது கோபம் நாரதருக்கு! பிடி சாபம் என்கிறார்! தற்காலத்திய உலகுக்கு ஏற்றது ஸெக்ஸ். காமம் தானே!

அதைச் சித்தரிக்க தாசிகள்தான் அகப்பட்டார்கள். பாவம் தாசிகள் இல்லையானால் தமிழ்ப்படமே உருப்படாது போலிருக்கிறது. நல்லதாசி கெட்டதாசி, முக்தியையும் பக்தியையும் நாடும்தாசி இப்படிப் பலவகைப்பட்ட தாசிவகுப்பில் அந்தப் பெண்ணைப் பிறக்கும்படி சபிக்கிறார் நாரதர். இதைக் கண்டு பெண்ணான லக்ஷ்மி சும்மா இருப்பாளா! வாங்கிக்கோ எதிர் சாபம். என்கிறார்! நாரதர் அந்தஸ்துக்குத் தகுந்தார்போல (ஆண் பிள்ளை பாருங்கள்) ராஜாவாக அவதரிக்கும்படி சாபமிடுகிறார். தாசி கண்ணன்மேல் காதல்கொள்கிறாள். நாரதராஜா இவளை பலவந்தப்படுத்துகிறார். இடைஇடையே பொழுது போகாத சாமி (கண்ணன்) வந்து புகுந்து கலாட்டா செய்கிறார் இது தான் கதை.

பழங்காலத்துத் தெருக்கூத்து பாணியில் இருக்கிறது கதைப்போக்கும் வசனமும் நடிப்பும் பாதி படத்திற்கு ஒரே நாட்டியமயம்தான்! எல்லோரும் லலிதா பத்மினியை தங்கள் படங்களில் சில நிமிஷநேரம் தான் உபயோகித்துக்கொண்டிருக்கின்றனரே என்று சுப்ரமணியம் அவர்கள் தன் முழுப்படத்திலும் அவர்களை ஆட்டிவைத்துவிட்டார். கோபிகை கண்ணன் நடனம், குறத்தி நடனம்—'ஒரு இடத்தில் முன்னும் பின்னும் ஒருகாட்சியிலும் சேராமல் ஒரு நடனம் துண்டாக இருக்கிறது அது எதற்காக யார் முன்னிலையில் ஆடப்படுகிறது என்றே விளங்கவில்லை—இப்படி ஒரே நாட்டிய மயமாக இருககிறது.

வேஷப்பொருத்தம் :— வழக்கப்படி ஹொன்னப்பா பாகவதர் சோபிக்கவில்லை.

ராஜம்மா இப் படத்தில் தோன்றுவதுபோல இனிவரும் படங்களில் தோன்றினாலோ அல்லது உடல் நிலையை இப்படியே நீடிக்க விட்டாலோ வந்தது ஆபத்து! ஏகப் பெருமன்! உருட்டிவிட்ட பீப்பாய் போலாகிவிட்டார்! பல படங்களில் அழகுபடத் தோன்றிய ராஜம்மாவா இவர் என்று வியப்படைந்துவிட்டேன். இந்த 'ஊதலை உடனே! கவனித்துத் தக்க பரிகாரம் தேட வேண்டும்!

சுப்ரமணியம் அவர்கள் இப்படிப் பொருத்தமற்ற கதா பாத்திரங்களைச் சிருஷ்டிப்பார் என்று நினைக்கவே இல்லை. "சக்ரவர்த்தி மகாராஜ்" என்ற வசனத்திற்கு இருக்கும் கம்பீரம்கூட அந்த வேஷதாரிக்கு இல்லை. ஒட்டி உலர்ந்துபோன அந்த சரீரத்துக்கு மூக்குதான் முழநீளம் இருக்கிறது. சிற்றரசன் ஹொன்னப்பாவின் கம்பீரம்கூட இல்லை சக்கரவர்த்தி மகாராஜ்ஜிற்கு! ஒரு அற்புத அழகுவாய்ந்த தாசி இந்த சக்ரவர்த்தி மகாராஜ்ஜைக் காதலிப்பாளா என்பது சிரிப்பிற்கு இடமானது.

ஏதோ பெண்பித்துக்கொண்ட ஒரு ஜமீந்தாரின் அட்டகாசம்போல இருக்கிறதே ஒழிய ராஜா, (அவனுக்குள்ள அதிகார அந்தஸ்து முதலியன சித்தரிக்கப்படவில்லை. கதாபாத்திரமும் வேஷப் பொருத்தமும் சரியில்லாததுதான் இதற்குக் காரணமென்று சொல்லாமலே விளங்கும்.

சௌதாமினியின் பேயாட்டம்; படத்தைப்பற்றி தப்பித்தவறி நல்லெண்ணம் கொள்வதையும் சாப்பிட்டுவிடுகிறது. கீச்சு மூச்சென்று கூச்சலிடும் இவர் கதையின் ஹாஸ்ய பாத்திரமாக இருந்தும் பிரதான பாத்திரத்திற்கு மேல் கூத்தடிக்கிறார். ராமச்சந்திரனின் ஹாஸ்யமும் சோபிக்கவில்லை.

படத்தில் ஒலிப்பதிவு மோசமாக இருக்கிறது.

ராஜம்மாவும், ஹொன்னப்பாவும் பாடும் சில பாடல்கள் இனிமையாக இருக்கின்றன.

இந்தப் படத்தைப்பற்றி (இதற்கு மேல்) விமர்சனம் செய்ய அதில் ஒன்றுமே இல்லை.

மொத்தத்தில் கோகுலதாசி டைரக்டர் சுப்ரமணியத்திற்கு ஒரு மகத்தான தோல்விதான்.

மாடர்ன் தியேட்டரில் 'மாயாவதி' ஆரம்பம்

சென்ற புதன் கிழமை கணபதி பிக்சர்ஸார் தங்கள் புதிய படமான மாயாவதியின் ஆரம்ப விழாவை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் அதி விமரிசையாக நடத்தினார்கள். டைரக்டர் T. R. சுந்தரம் காமிராவை முடுக்கிவிட்டு படப்பிடிப்பை ஆரம்பித்து வைத்தார். பல பிரபலஸ்தர்களும் நட்சத்திரங்களும் விழாவிற்கு விஜயம் செய்திருந்ததோடு அனேக வாழ்த்துச் செய்திகளும் வந்து குவிந்தன. நட்சத்திர ஜாபிதா இன்னும் வெளியிடப்படவில்லை.

பம்பாயில் எஸ். எஸ். வாசன்

ஹிந்தி 'சந்திரலேகா' ஆரம்ப விழா!

ஜெமினியின் மகத்தான சிருஷ்டியான ஹிந்தி சந்திரலேகா பம்பாயில் ராயல் ஆப்பரா, ரிவோலிட், ஜய்ஹிந்த் என்ற மூன்று தியேட்டர்களில் திரையிடப்பட்டது. ராயல் ஆப்பராவில் படத்தின் ஆரம்ப வைபவம் மேன்மைதங்கிய பம்பாய் கவர்னர் சர். மகாராஜ் சிங் அவர்களின் தலைமையில் விமரிசையாக நடந்தது.

பலத்த கரகோஷத்துக்கு இடையே மே. த. கவர்னர் அவர்கள் பேசலானார்.

"என்னைப்போலவே இங்கு கூடியுள்ள நீங்களும் இந்தப்படத்தை முழுமையும் ரசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உண்மைதானே (கரகோஷம்) இந்த ஒரு வருஷத்தில் நான் பார்த்த பிரமாதமான படங்களில் இதுவும் ஒன்று. இன்று என் முன்னிலையில் தியேட்டர் நிறைந்த அன்பர்களையும் அவர்களின் உள்ளங்கள் மகிழ்ச்சியால் பொங்கி வழிவதையும் காண்கிறேன். இந்த சந்திரலேகாவில் அற்புதமாக இயற்கைக் காட்சிகளையும், குற்றமற்ற குணசித்திர நடிப்பையும், வயிறு குலுங்கவைக்கும் நகைச்சுவையையும் ரசித்தோம். என் சார்பாகவும் உங்கள் சார்பாகவும் திரு. வாசன் அவர்களை இந்த அற்புத சிருஷ்டிக்காகப் பாராட்டுகிறேன்.

இதுபோன்ற பல உயர்ந்த படங்களை நமக்கு அடிக்கடி வாசன் அவர்கள் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

"பொது நன்மைக்காக அவர் அளித்த ரூ. 2000 செக்கைப் பெற்றுக்கொண்டு அவருக்கு என் வந்தனங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பணம் பம்பாய் நகரின் அபிவிருத்திக்குச் செலவிடப்படும் என்பதையும் உறுதிகூறுகிறேன் மறுமுறையும் என் வந்தனங்களை வாசன் அவர்களுக்கும், ஜெமினி ஸ்டுடியோவிற்கும், இந்த அற்புத சிருஷ்டிக்கும் அளிக்கிறேன். ஜெய்ஹிந்த்."



அன்பர் ராமசாமி, திரை உலகில் ஒரு புதிய முகம். நடிப்புத் திறமையும், நடிக்க ஆவலும் மிகுந்த இவர் டைரக்டர் சுப்ரமணியத்தின் படத்தில் தோன்றப்போகிறாராம்.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் சூலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய சூலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள் இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதரூஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

தேவை

புதிதாக வந்திறங்கியிருக்கும் எமது யு எஸ். ஏ. பவுண்டன் பேனுக்களுக்கு ஏஜண்டுகளும், ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை. மாதிரிக்கும், இலவச ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் பின்வரும் விலாசத்துக்கு எழுதவும் :—

HOUSE OF COMMERCE
74, G. B. Road, (S/T)
DELHI.

குறிப்பு :- தபால் போக்குவரத்து அனைத்தையும் ஆங்கிலத்திலேயே வைத்துக்கொள்ளவும்.

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் கிடையாது. முப்புவினுல் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதருஸ்

புத்தக விமர்சனம்

கம்பர் கழகம் :

கம்பனது கவிதைச் சிறப்பை இலக்கியச் சுவையுடன் தமிழ் மக்கள் ரஸித்துய்ய வேண்டும் என்ற அவாவுடன் கம்பர் விமரிசனங்கள் பத்திரிகைகளில் இதுகாறும் நிறையப் பிரசுரமாகி வந்திருக்கின்றன. மேலும் சென்னைக் கம்பர் கழகம் என்ற பெயரில் ஒரு கழகம் அமைக்கப்பட்டுச் சிறிது காலமாகச் சீரிய தொண்டாற்றி வருகிறது.

இக்கம்பர் கழகத்தைப் பதிவு செய்யும் நோக்குடன் கழக அமைப்பை விரிவாக வகுத்து குறிப்பும் சட்டங்களும் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

அரசியல், சமய, மொழிப் பூசல்களுக் கப்பாற்பட்டுக் கம்பனைச் சுவைக்கவும், சுவைக்க உதவவும் கருத்துக் கொண்டிருக்கிறது இக்கழகம். இக்கருத்துகளை நடைமுறையில் கொண்டு செலுத்தத் தக்க திட்டங்களும் வகுத்திருக்கிறது.

கூட்டங்கள், வகுப்புகள், நாவன்மைப் பயிற்சிக் கூடங்கள், கலைதெரி கழகங்கள் மூலம் கம்பரஸத்தை வழங்குவது;

"மேலை நாட்டு இலக்கிய விமரிசன ஆராய்ச்சி" முறைகளைத் தழுவிக் கம்ப விமரிசனங்கள் பிரசுரித்து, நூல்கள் வெளியிடுவது; இதற்கான ஆராய்ச்சி மன்றம் நிறுவுவது;

கம்பராமாயணத்திலிருந்து "சிறந்த" பாட்டுகளைத் தொகுப்பதுடன், "திருந்திய" கம்பராமாயணப் பதிப்பை மலிவாக வெளியிடுவது;

மேலும் இது சம்மந்தமான அகராதிகள், நிகண்டுகள், கருவூலங்கள் தயாரிப்பது;

கம்பராமாயணத்தைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்தல்; கம்பர் பெயரால் பரிசு வழங்குதல்; தேரழுந்தூரிலும் சென்னையிலும் 'ஞாபகச் சின்னங்கள்' ஏற்படுத்தல்; கம்பரோடு தொடர்புடைய எல்லாப் பொருள்களையும் வாங்கிப் பொதுமக்கள் காட்சிப் பொருள்களாக்குதல்; ஆண்டுதோறும் கம்பர் விழா, கம்பர் மகாநாடு நடத்தல்; இதர தமிழ் நாட்டுக் கம்பர் கழகங்களுடன் தொடர்பு கொள்ளுதல்.

மேலே குறிப்பிட்ட சீரிய நோக்கங்களுடன் இயங்கிவரும் கம்பர் கழகத்துக்குத் தமிழ் மக்களிடம் ஏராளமான ஆதரவு கிடைக்குமென்பதை நாம் கூற வேண்டியதே இல்லை; கம்ப ரஸிகர்கள் ஏராளமாக இக்கழகத்தில் சேர்ந்து ஊக்கமடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் "சென்னைக் கம்பர் கழகம், 'சோமசுந்தர விலாசம்' 8, சின்ன ரெட்டித் தெரு. எழும்பூர், சென்னை" என்ற விலாசத்துடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

அழுகை

(கட்டுரைத் தொகுதி. ஆசிரியர் வ சேதுராமன். வெளியிட்டோர் சேது பதிப்பகம், 19-பி, கச்சேரி தெரு, கரூர். விலை அணா பத்து)

அன்பர் டி. எஸ். சோமசுந்தரம் பிள்ளையவர்களது அன்பான முன்னுரையுடன் வெளிவந்திருக்கும் இச் சிறு நூல் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைத் தொகுப்பாக இருக்க விழைகிறது

வாழ்க்கையின் அனுருட நடவடிக்கைகளைக் கருவிகளாகக் கொண்டு சிந்தனைக்கும் செயலுக்கும் உள்ள சம்பந்த சாம்யங்களையும், உதவியின் இன்றியமையாமையையும், அழுகையின் தாத்பரியங்களையும் ஆராய்ந்திருக்கும் அன்பர் சேதுராமன் வாழ்க்கைக் காட்சிகளை ஊடுருவ முயற்சி செய்திருக்கிருர்.

சிந்தனைக்குரிய விஷயங்களைப் பொழுது போக்குக்குரிய பாணியில் கொடுக்கும் இச் சிறு நூல் வரவேற்கத்தக்கதொரு இலக்கிய முயற்சியாகும்.

தமிழ்க் கலை

(தை மலர். ஆசிரியர் ஏ. எம். பரமசிவானந்தம். கிடைக்குமிடம் 34, வைத்தியநாத முதலி தெரு, சேத்துப்பட்டு, சென்னை 10)

'தமிழ்க் கலை' மாசிகையின் தை மலரில் இலக்கியச் சிறப்பு மிக்க பல அறிஞர்கள் எழுதியிருக்கிருர்கள். ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் நடராஜன், கி. ராமலிங்கம் முதலிய அறிஞர்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்துள்ளனர். பல சிறு கதைகளும், புகைப்படக் கோப்பும் மலருக்கு அழகு செய்கின்றன. இதன் விலை ரூபாய் ஒன்று.

Electolite 'எலெக்டோலைட்'

(மின்சாரம் பற்றிய வருட நான்கு முறைச் சஞ்சிகை. தென் மதருஸ் மின்சார சப்ளை கார்பொரேஷன் வெளியீடு, திருச்சி. தனிப்பிரதி விலை அணா 4)

மின்சாரத் துறையில் சேவை செய்ய முன்வந்திருக்கும் நம் நகரத்து சகோதர சஞ்சிகையை வரவேற்கிறோம். விமரிசனத்திலிருக்கும் முதல் இதழில் திருச்சி கார்பொரேஷனின் சரித்திரம் அழகாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரஸாயன வைரங்களின் உற்பத்தி பற்றியும், மின்சாரத்துக்கும் கான்கிரீட்டுக்கும் உள்ள உறவு பற்றியும் இனிய கட்டுரைகள் வரையப்பட்டுள்ளன.

சஞ்சிகையில் தனியே தமிழ்ப் பகுதி ஒன்று ஒதுக்கப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இப்பகுதியில் உபயோகமான மின்சாரத் துறைச் சாதனைகளைப் பற்றி சேதிகளும், கட்டுரைகளும் வெளியிடப்படலாம்—வெறும் கதைகளுக்குப் பதிலாக

சஞ்சிகையின் அமைப்பு பொலிவுடனிருக்கிறது.

கிடைக்கப் பெற்றோம்

கொடுவாய் விவேகானந்த வாலிபர் சங்கத்தினர் தமது சங்கத்தின் 8-வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்டிருக்கும் அறிக்கை நூல் கிடைக்கப் பெற்றோம்.

மும் முறை

ஆசிரியர் 'தண்டமிழ்ப் பித்தன்'. மாத மும்முறைப் பத்திரிகை, கடலூர் என். டி. தனிப் பிரதி விலை அணா 2

★

வேலை நிறுத்தம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரித்துக்கொண்டேன். குமுதம் நடப்பதின் காரணம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா? பணம்தான் மணிபர்ஸில அப்படியே இருந்ததே! கடைவீதி வழியாகத்தான் வந்தோம். அம்பிகா ஸ்டோரில் நுழைந்து சோப்பும், பவுடரும் வாங்கிக் கொண்டு புறப்பட்டோம். ராமனுதன் செட்டியார் கடைக்கு எதிரே வந்தபொழுது 'தீப்பெட்டி விற்கப்படும்' என்ற போர்டைப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தேன். அங்கிருக்கும் வேலைக்காரப் பையனைப் பார்த்து 'தீப்பெட்டி ஒரு டஜன் கொடு' என்றேன். அப்படியாவது ஒரு டஜனை வாங்கிவிட்டால் இனியும் 'ஸ்ட்ரைக்'குக்கு வழியில்லையல்லவா! அது செய்த வேலைதானே. 'சாமி ஆளுக்கு ஒண்ணுதான்' என்றான் அவன். 'குமுதம்' என்று கூப்பிட்டேன் 'ஏன்?' என்று கேட்டுக்கொண்ட உள்ளே நுழைந்தாள் குமுதம். ஆளுக்கு ஒரு தீப்பெட்டியாக மூன்று வாங்கிக்கொண்டு வீடு வந்தோம்.

'சரி சரி என்ன யோஜனை எழுந்து சாப்பிட வாருங்கள்" என்றாள் குமுதம்.

"இதோ! நான் ரெடி. அப்பாடா தீப்பெட்டியும் வந்தது. சோறும் கிடைத்தது" என்று சொல்லிக்கொண்டே சாப்பிட எழுந்தேன்

TRADE MARK
குவாலிடி காப்பி
திருச்சி.

ரேகை சாத்திரம்

ஆயுள் ரேகை

"சிவதாஸன்"

சென்ற வாரத்தில் ரேகைகளின் பொது அமைப்பைப் பற்றி கவனித்தோம். உலகில் எல்லாம் ஆயுளை அடிப்படையாகக் கொண்டுதான் நடக்கிறது. மனிதர்களின் ஆயுளைப் பற்றி நிர்ணயிப்பதில் ஆயுள் ரேகை முக்கிய அம்சமாக விளங்குகிறது. ஆயுள் ரேகை சுக்ர மேட்டை வளைத்து அரை வட்டம்போல் காட்சி அளிக்கிறது. சிலர் புத்தி இருதய ரேகைகளைக் கொண்டும் ஆயுளை நிர்ணயிக்கிறார்கள். ஆனாலும் ஆயுள் ரேகைதான் முக்கியமாக பரிசோதிக்கப்பட வேண்டும் ஒருவருக்கு பலன் சொல்லும் பொழுது முதலில் ஆயுள் ரேகை எப்படி இருக்கிறது. பூரண வயது இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும். ஆயுள் ரேகை நீளமாக, நடுவில் துண்டுகள் இல்லாமல் அமைய வேண்டும். இது பூரண வயதைக் காட்டுகிறது. சாதாரணமாக பூரண வயது என்ற இடத்தில், மனித ஆயுள் 100 என்றாலும் தற்காலத்தில் 70—75 வயதிற்கு மேல் அதிகப் பேர் உயிருடன் இருப்பதில்லை. பிறரை சந்தோஷப்படுத்துவதற்காக 100 வயது உண்டு என்று சொல்லக் கூடாது. பூரண வயது என்றால் போதும்; இதுவே ஆயுள் ரேகை நன்கு அமைந்ததின் பலன்.



1. முதல் அங்குலாஸ்தி 2. இரண்டாம் அங்குலாஸ்தி 3. மூன்றும் அங்குலாஸ்தி 4. சனி வளையம் 5. சுக்கிர வளையம் 6. இருதய ரேகை 7. சதுரம் 8 புத்தி ரேகை 9. முக்கோணம் 10 புதன் ரேகை 11. அருள் ரேகை 12. ஐக்கிய ரேகை 13. குழந்தை ரேகை 14. சூரிய ரேகை 15. விதி ரேகை 16. ஆயுள் ரேகை 17. செவ்வாய் ரேகை.

ஆயுள் ரேகை நடுவில் துண்டுபட்டு இருப்பதுண்டு. இந்த இடத்தில் சதுரக் குறியினால் இணைக்கப்படாமல் இருந்தால், அந்தக் கால அளவில் திடீரென்று எதிர்பாராத விதமாக ஆபத்துக்கள் வரும் என்பது. சிலருக்கு ஆயுள் ரேகையில் தீவு மாதிரி காணப்படும். இது மிகவும் கெடுதல் இது இருக்கும் கால அளவில் நோய் வந்து கொஞ்சகாலம் படுத்தும் என்பது. சாதாரணமாக ஒரு தீவுக் குறி காணப்பட்டால் 6—9 மாதங்கள் வரை நோய் கடுமையாக இருக்கும். சிலருக்கு கிரகங்கள் நன்கு அமைந்திருந்தால் அவ்வளவு கடுமையாக இருக்காது. ஆயுள் ரேகையில் நட்சத்திர குறி காணப்பட்டால் மரணம் திடீரென்று சம்பவிக்கும்.

ஆயுள் ரேகை இறுதியில் இரண்டு கிளைகளாக பிரிந்து விட்டால் மரணம் மிகவும் கஷ்ட நிலையில் ஏற்படும் என்பது. ஆயுள் ரேகையின் இறுதியிலிருந்து ஒரு மெல்லிய ரேகை சந்திர மேட்டுக்கு சென்றால் தூர தேசத்தில் மரணம் என்பது. ஒருவரின் மரண காலத்தைப் பார்க்கக் கூடாது. மேதாவியான "கீரோ" என்பார் "லார்ட் கிச்சனரின்" மரண காலத்தைப்பற்றி பல ஆண்டுகள் முன்பாக கூறினார். என்றாலும் அருள் வாக்கு உடையோர் தான் பிறரின் மரணகால ரேகையைப் பார்க்க முடியும்.

ஆயுள் ரேகையை ஒட்டி செவ்வாய் ரேகை என அழைக்கப்படும் ரேகை சிலர் கையில் அமைவதுண்டு. இது ஆயுள் ரேகைக்கு பலம் கொடுப்பதோடு ஒருவரின் செல்வாக்கு எப்படி என்பதையும் காட்டுகிறது. இந்த ரேகை பெண்கள் கையில் காணப்பட்டால் சிறந்த பதிபக்தி உடையவர்களாக விளங்குவார்கள். ஆயுள் ரேகை உற்பத்தியில் புத்தி ரேகையோடு கூடி அமைவதுண்டு. இவர்களிடம் மன உறுதியும் தன்னம்பிக்கையும காண முடியாது. ஆயுள் ரேகை புத்தி ரேகையிலிருந்து மிகவும் தள்ளி தனிமையாக உற்பத்தியானால், இளம் வயதில தன்னிஷ்டப்படி நடப்பவர்களாகவும், முன் யோசனை யில்லாமல் பெரிய காரியங்களில் சிக்குண்டு தவிப்பார்கள்.

நிற்க ஆயுள் ரேகையில் இன்னும் முக்கியமாக காணப்படுவது கிளைகள். இதில், ஆயுள் ரேகையிலிருந்து மேல் நோக்கிய கிளைகள் மிகவும் விசேடம். இவைகள் வாழ்க்கையில் படிப்படியாக உயரப் போவதை காட்டுகிறது. இந்த கிளைகள் குரு மேட்டுக்கு சென்றால் இன்னும் விசேடம். இதன் பலன் குரு மேட்டின் உன்னதமான குணங்களை பலப்படுத்தும். கையின் மத்ய பாகத்தில் விதி (சனி) ரேகை காணப்படாமல் இருந்து அதே அளவில் ஆயுள் ரேகையின கிளை சனி மேட்டுக்குச் செல்லுமானால் இதுவே விதி ரேகையாக பிரகாசிக்கிறது. இதுமாதிரி பல கைகளில் பார்க்லாம். சுக்ரமேட்டிலிருந்து ரேகைகள் ஆயுள் ரேகை வரை வருவதுண்டு. சதா யோசனை செய்பவர்களுக்கும், தீவிர அரசியல் வாதிகளின் கைகளிலும் இப்படி அமைவதுண்டு. ஆயுள் ரேகையை இந்த ரேகைகள் குறுக்கிடுமானால், இந்த கால அளவில் நோய் உண்டாகும் என்பது. ஆயுள் ரேகையைத் தாண்டி புத்தி, இருதய ரேகைக்கு இந்த சுக்ரமேட்டு ரேகை செல்லுமானால், மனக் கலக்கமோ, அல்லது உறவினரின் மரணத்தையோ காட்டுகிறது. இந்த ரேகை இன்னும் தாண்டி ஐக்ய ரேகை வரை செல்லுமானால் மனைவியை இழக்கவோ அல்லது தள்ளி வைப்பதற்கோ ஏற்படும்.

ரேகையின் கால அளவை அறிவது எல்லாவற்றிலும் முக்கியம். இதைப்பற்றி விவரமாக மற்ற ரேகைகளை ஆராய்ந்த பிறகு பார்ப்போம். முக்கியமாக ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டியது ஆயுள் ரேகையிலுள்ள குற்றங்கள். இதை அறிந்து எச்சரிக்கையுடன் இருந்தால் எவ்வளவு கடும் ஆபத்துகளையும் நீக்கலாம்!

(தொடரும்)

*

ஜூபிடர் பிக்சர்ஸின் வேலைக்காரி இம்மாதம் 25-ந் தேதி பல ஊர்களில் தோன்றப்போகிறாள். அறிஞர் அண்ணாவின் கருத்தோவியம் தான் வேலைக்காரி என்பது வாசகர்களுக்குத் தெரியாததல்ல. ராமசாமி, ஜானகி, ராஜம்மா, பாலையா, நம்பியார் முதலியோர் நடிக்கும் இப்படத்தில் லலிதா பத்மினி சகோதரிகளின் நாட்டியம் கண் கவர் வனப்புடன் அமைந்திருக்கிறதாம்.

ஏஜன்ஸி தேவை

கம் சொந்தக்கைத்தறி ஸில்க் தயாரிப்பு. விற்பனையாளருக்கும்; ஏஜன்ஸிகளுக்கும் 6 ஜெஜம் கலர் ஸில்க் ஸாரி 1க்கு ரூ. 9 வீதம் அனுப்பப்படும். 3 ஸாரிக்கு மேல் ஆர்டர் செய்தால் வி.பி. சார்ஜ் இனும்

JOTHI FABRICS.
Kottar. Travancore

ஆப்டோன் & லைன் பிளாக், சைன்போர்ட், ரப்பர்ஸ்டாம்ப் சீலடுகள் செய்யுமிடம்
S.R.ப்ராஸஸ்
சின்னக்கம்மாளதெரு .... திருச்சி.

தாம்பூலத்திற்கு மைதீன் புகையிலை மேலானது
E.S.MYDEEN & Co.
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57
Estd. 1909
Branch : MANNARGUD

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

Regd. No. M. 3398 SHIVAJI 13—2—49 Estd. 1935

விந்தை உலகம் 'மூர்த்தி'

மீசைக்கு மதிப்பு

ஜப்பானைச் சேர்ந்த ஜெனரல் நாகோகா (Nagaoka) 1933-ல் இறந்தபோது அவரது மீசையை மட்டும் தனியாக எடுத்து ஒரு அழகிய பேழையில் வைத்து சமாதி செய்தார்களாம். அப்படி அந்த மீசை என்ன அதிர்ஷ்டம் செய்தது என்கிறீர்களா? அது 18 அங்குல நீளம் வளர்ந்திருந்தது. அவ்வளவுதான்.

கைக்குட்டை விஷயம்

கைக்குட்டைகள் பதினேழாம் நூற்றுண்டிலேயே பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஒரு குச்சியில் பொருத்தப்பட்ட நரியின் வாலைக் கைக்குட்டையாகவும், விசிறியாகவும் உபயோகித்தார் தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த புஷ்மன் என்பவர். மத்திய ஐரோப்பாவில் மணமகள் திருமணக்காலத்தில் உதிர்க்கும் ஆனந்தக்கண்ணீரைத் தாங்கிக் கொள்ளக் கைக்குட்டைகள் பயன்பட்டன. நீண்டது, வட்டம், முக்கோணம் முதலிய ஒழுங்கற்ற கைக்குட்டைகள் தான் முதன் முதலில் பழக்கத்திலிருந்தன. சதுரமான கைக்குட்டை 1785-ம் வருஷம் பிரான்ஸ் அரசன் லூயி தன் மனைவி மேரி அண்டனி (Marie Antoinette) யின் விருப்பப்படி நாடு முழுமையும் கைக்குட்டையின் நீளமும் அகலமும் சமமாக இருக்கவேண்டுமென்று உத்திரவிட்டான். அன்று முதல்தான் கைக்குட்டை சதுர உருவம் பெற்றது.

சாவிற்குப்பின் உயிர்

ஆரோக்யமுள்ள மனிதனின் ஹிருதயத்துடிப்பு நின்றுபோய் அவன் இறந்தாலும் அவன் உடலின் அவயவங்கள் இறக்கநேரமாகிறது என்பதை சோதனை மூலம் கண்டுபிடித்துள்ளனர். மனிதன் இறந்தபிறகும் மூளை பத்து நிமிஷங்கள் உயிருடன் இருக்கிறது. ஹிருதயத்தசைகள் 20 நிமிஷம், கண்கள் 30 நிமிஷம், காது 1 மணி நேரம், கை கால் தசைகள் 4 மணி நேரம், ரத்தம் (வடிகங்கள்) 18 மணி நேரம், எலும்புகள் 3 நாட்கள், தோல் 5 நாட்கள் வரையும் உயிருடனிருக்கின்றனவாம்.

பெரிய சமையலறை

நியூயார்க்கிலுள்ள வால்டார்ப் அஸ்டோரியா என்ற ஹோட்டல் தான் உலகிலேயே பெரிய ஹோட்டல். அங்குள்ள சமையலறை தான் மிகமிகப்பெரியது. இங்கு சமையலில் பேர்போன 14 சூப்பரிண்டெண்டுகள் இருக்கின்றனர். 11 பேர் பழரஸ பானம் தயாரிப்பதில் சமர்த்தர், 10 பேர் ரொட்டி செய்வதற்குமட்டும் இருக்கின்றனர். 8 பேர் தங்கள் கவனம் முழுவதையும் சூப் செய்வதிலும், காய்கறி சம்பந்தமான உணவு தயாரிப்பதிலும் செலுத்துகின்றனர். இந்த ஹோட்டலில் 3700 பேர்களுக்கு உணவு தயாரிக்கப்படுகிறது.

பிரசிடெண்ட் வாழ்க்கை

ஹைடி (Haiti) என்ற இடத்தில் 1804 முதல் 1903 வரை ஆதிக்கம் செலுத்திய 25 பிரசிடெண்டுகளில் 15 பேரை கிளர்ச்சி செய்து விரட்டியடித்தனர். அந்த 15 பேர்களில் 13 பேர் நாடு கடத்தப்பட்டு நாடோடியாகத்திரிந்தனர். இருவர் ஹைடியிலேயே கொல்லப்பட்டனர்.

3 பேர் காரியாலயத்திலேயே பலவந்தமாகக் கொல்லப்பட்டனர் மற்ற மூவர் இறந்ததற்குக் காரணம் தெரியவில்லை. ஒருவர் படுகாயமடைந்து மரணமடைந்தார். ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். ஒரே ஒரு பிரசிடெண்ட்தான் தன் படுக்கையில் இறந்தார்! 'ஹைடிக்குப்பிரசிடெண்டாகப் போகிறீர்களா?

பூட்ஸ் மரணம்

ஹண்டுராஸ் என்ற ஒரு ஊரிலிருந்த ஒரு விறகு வெட்டி பாம்பு கடித்து இறந்தானும்- அவனது பூட்ஸ் விற்கப்பட்டது. அதை வாங்கியவனும் சில மணி நேரத்துக்குகெல்லாம் இறந்தான், காரணம் தெரியவில்லை. அந்த பூட்ஸ்கள் மறுபடியும் விற்கப்பட்டன. இரண்டாவது முறையாக அதை வாங்கியவனும் உடனே இறந்தான். அவனிடம் பாம்புக்கடியின் அடையாளங்கள் தென்பட்டன. உடனே அந்த' பயங்கர பூட்ஸை சோதித்ததில் அதில் ஒரு பூநாகம் இருந்ததாம்.'ப்

விரல் உரலானால்

சூரியனைப்போன்ற ஒரு உருண்டை செய்ய நமது பூலோகத்தைப்போல 1,333,000 பூமி வேணுமாம். ஆனால் சூரியன் நட்சத்திரத்தோடு ஒப்பிட்டால் சூரியன் மிகமிகச்சின்னது. ஆனால் பார்க்க சூரியன் பெரிதாகத்தெரிகிறது. ஏனென்றால் பூமிக்கு ரொம்பகிட்ட அதாவது 93,000,000 மைல்களுக் கப்பால் சூரியன் இருப்பதனால்!

வேடிக்கை

தென் அமெரிக்காவிலுள்ள சில்லி என்ற நாட்டில் 51 வருஷத்தில் (1853—1904) 109 தினுசான தபால் தலைகள் அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் கிரிஸ்தபர் கொலம்பசின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதில் விநோதம் என்ன வென்றால் இந்த நாட்டை கொலம்பஸ் கண்ணால்கூடப் பார்த்ததில்லை என்பது தான்.

அங்கும் இங்கும் "வாசுகி"



பெரிய சத்தம்

இந்த யுத்தத்தில் எவ்வளவோ பயங்கரமான சப்தங்களை உலகம் கேட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான டன் நிறையுள்ள பாம்கள் வெடித்திருக்கின்றன. அணுகுண்டின் அமக்களம் நாமறிந்ததுதான். ஆனால் இவைகளை எல்லாம் விடப்பயங்கரமான ஒரு சப்தம். உலகை அதிர வைத்த சப்தம், 65 வருஷங்களுக்கு முன்பு ஏற்பட்டது. ஜாவாவிலுள்ள எரிமலைத்தீவில் ஒரு பெரிய எரிமலைச்சிகரம் வெடித்து அக்னிக்குழம்புகளைக் கக்கிய கோரம் பயங்கரமானது. அதனால் ஏற்பட்ட சப்தம் 3000 மைல்களுக்குக் கேட்டதாம். 3 மாதங்கள் வரை வெண்தீயின் நாக்குகள் வானத்தை நோக்கிப் பீறிட்டடித்ததாம். அந்த கோரக் காட்சி நடக்கும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கப்பால் ஒரு நாள் ஒரு மனிதன் தன் இருப்பிடத்தை நோக்கி கடலில் தீச்சுடர் உருண்டோடி வருவதைக்கண்டானும். தீவு நொறுங்கிக் கடலில் மூழ்கிற்றும். கடல் வாழ் பிராணிகளெல்லாம் வேகவைக்கப் பட்டன; ஏன் பொறிக்கப்பட்டன என்றுகூடச் சொல்லலாம்.

90 அடி உயரமுள்ள பிரமாண்டமான அலைகள் எழும்பி சுற்றிலுமுள்ள கரையில் தாக்கி உலக முழுதும் கொந்தளிப்பை உண்டாக்கிற்றும். எரிமலையின் புகையும் செந்தூளும் 600 மைல் வரை வானத்தை இரவுபோலக் கருக்க வைத்துவிட்டது. அந்தப் புகையும் புழுதியும் ஜாவா சுமத்ரா முதலிய அருகிலுள்ள தீவுகளில் 7 அடி உயரத்திற்குப்படிந்ததாம்.

அந்தத்தீவில் 3-ல் 2 பாகம் அழிந்தது. இன்றும் அந்த எரிமலை புகைந்து கொண்டுதான் இருக்கிறது.

ஃ ஃ ஃ

விசித்திரப் பந்தயம்

1870-ல் சதர்ன் பசிபிக், சாண்டாபி என்ற இரண்டு ரயில்வே கம்பெனிகளுக்கிடையே ஒரு பந்தயம் நடந்தது. காரசாரமான பந்தயம்தான் லாஸ் ஏஞ்ஜல்ஸிலிருந்து சிக்காக்கோ போய்விட்டுத் திரும்பவேண்டும். 4456 மைல்கள். இதில் யார்வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கு தோற்றவர்—என்ன தெரியுமா தரவேண்டும். 1 டாலர்! ஒரே ஒரு டாலர்தான் பந்தயம்!

ஒரே அடி

புராதன எகிப்தியர்கள் வியாதியஸ்தர்களை ஆபரேஷன் செய்யும் காலத்தில் மயக்க மருந்து கொடுக்கும் விதமே விநோதமானது. அக்காலத்தில் ஈதர் குளோரபாம், நைட்ரஸ் ஆக்ஸைட் முதலிய மயக்கமருந்து சாதனங்களின் உபயோகம் தெரியாத காலம். ஆகையால் எகிப்திய டாக்டர்கள் ஆபரேஷன் செய்யவேண்டிய நோயாளியின் தலையில் ஓங்கிப்பலமாக ஒரு அடிகொடுப்பார். நோயாளி அடியால் மயங்கிக்கீழே விழுவர். பிறகு ஆபரேஷன் ஆரம்பமாகும்.

Prinetd at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).